Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

ஸ்ரீ முருகன் ஸ்தாபனத்தாரின் மற்றுமோர் சேவை
வெளிநாடுகளில் வசிக்கும் உறவுகளிடமிருந்து
WESTERN UNION | MONEY TRANSFER | SM வெஸ்டன் யூனியன் | பணப் பரிமாற்றம்
மூலம் சில நிமிட நேரத்தில் உங்கள்
கைகளில் பணம்கிடைக்க எம்மிடம் நாடுங்கள்
ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
303, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்
T.P: 021 222 5392
Fax: 2223214
E-Mail: smskr@eureka.lk
சிவன்கோவில் வீதி,
காரைநகர்.
T.P: 060 2212472
(சி/2201)

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 தை 29 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 துல்ஹஜ் 20 (12.02.2004) வியாழக்கிழமை இதழ் :133

# 39 அமைச்சர்களின் பதவிகள் சந்திரிகாவால் நேற்று பறிப்பு!

(கொழும்பு)

**அரசாங்கத்தில் அங்கம் வகித்த அமைச்சரவை அந்தஸ்து இல்லாத அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்கள் 39 பேர், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் நேற்று பதவி நீக்கம் செய்யப்பட்டனர்.**

நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட 7 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் அமைச்சரவை அந்தஸ்து இல்லாத 27 அமைச்சர்களையும் 12 பிரதி அமைச்சர்களையும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பதவி நீக்கம் செய்திருப்பதாக ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் தெரிவித்தார்.

அரசியல் அமைப்பிலுள்ள 46 (7) சரத்திற்கு அமைவாகவே ஜனாதிபதி இந்தத் தீர்மானத்தை எடுத்திருப்பதாகவும் - நாடாளுமன்றம் கலைக்கப்பட்டுள்ள நிலையில், காபந்து அரசு ஒன்றுக்கு இத்தகைய அமைச்சுப் பதவிகள் தேவையில்லையெனக் கருதியே ஜனாதிபதி இந்தப் பதவிகளை நீக்கியுள்ளதாகவும் இது தொடர்பான கடிதங்களை ஜனாதிபதியின் செயலாளர் அனைத்து அமைச்சர்களுக்கும் அனுப்பிவைத்துள்ளதாகவும், இதனையடுத்து

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் மிலிந்த பதவி விலகினார்!

(கொழும்பு)

பொருளாதார மறுசீரமைப்பு, விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சர் மிலிந்த மொறகொட தனது பதவியை நேற்று இராஜினாமாச் செய்தார்.

இவர் தனது பதவி விலகல் கடிதத்தை, நேற்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு அனுப்பிவைத்தார்.

தற்போது ஏற்பட்டிருக்கும் அரசியல் நெருக்கடியான சூழலில் நாட்டில் உருப்படியான எந்த

(12 ஆம் பக்கம் பார்க்க)

## யால சரணாலயத்தில் 14 பேரை காணவில்லை!

(கொழும்பு)

யால சரணாலயப் பகுதிக்கு சுற்றுலா சென்ற 14 பேரை கடந்த நான்கு நாட்களாகக் காணவில்லையென்று பொலிஸாரிடம் புகார் செய்யப்பட்டிருக்கிறது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

பதினான்கு பேரைக் கொண்ட சுற்றுலா பயணிகள் குழுவொன்று நான்கு வாகனங்களில் யால சரணாலயத்திற்குச் சென்றது. கடந்த

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்த்தேசிய கூட்டமைப்பில் முஸ்லிம் பிரதிநிதிகளும்!

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் இந்த முறை முஸ்லிம் பிரதிநிதிகளும் போட்டியிடவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தகவலை நேற்று, முன்னாள் வன்னி மாவட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

அவரது தகவலின்படி திருகோணமலை,

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வொஷிங்ரன் மாநாடு திட்டமிட்டபடி நடைபெறும்!

(வோஷிங்ரன்)

வொஷிங்ரனில் எதிர்வரும் 17 ஆம் திகதி நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் திட்டமிட்டபடி நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா நாடாளுமன்றைக் கலைத்த போதிலும், இந்தக் கூட்டம் இரத்துச் செய்வதற்கோ அல்லது ஒத்திவைப்பதற்கோ எதுவித திட்டமும் இல்லையெனவும் தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்க பிரதி இராஜாங்கச் செயலர் றிச்சட் ஆர்மிரேஜ் தலைமையில் எதிர்வரும் பதினேழாம் திகதி காலை பதினொரு மணிக்கு ஆரம்பமாகும் இந்த மாநாட்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சுவீடன் அதிகாரிகளுடன் தமிழ்ச்செல்வன் சந்திப்பு!

(சூரிச்)

தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் சுவீடன் நாட்டு இராஜதந்திரிகளை சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

நெதர்லாந்து நாட்டின் இராஜதந்திரிகளுடனான சந்திப்பு நேற்றுமுன்தினம் நிறைவு பெற்றதை அடுத்து, அவர் நேற்று சுவீடன் நாட்டு இராஜதந்திரிகளை சந்தித்து பேச்சுக்களை நடத்தினார்.

சுவீடன் நாட்டு இராஜதந்திரிகளுடனான சந்திப்பில் போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு பிரதேசத்தைக் கட்டியெழுப்புவது தொடர்பாக ஆராயப்பட்டது.

சர்வதேச மனிதாபிமான அடிப்படையிலான உதவிகளை தமிழ்மக்களுக்கு பெற்றுக் கொடுப்பது குறித்தும் அவர் அங்கு கலந்துரையாடினார்.

இதேவேளை, இவர் இன்று இத்தாலிக்கும், நாளை அயர்லாந்திற்கும் செல்லவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## சாவகச்சேரி உயர்பாதுகாப்பு வலயத்தில் இருந்து எந்த ஒரு வீடும் மக்களுக்கு கையளிக்கவில்லை!

### ஈ.பி.டி.பியின் செய்திக்கு படைத்தரப்பு மறுப்பு

சாவகச்சேரி - கச்சாய் வீதியில் அமைந்துள்ள உயர்பாதுகாப்பு வலயத்தை 400 மீற்றர் பின்னகர்த்தி, அதற்குள் இருந்த 79 வீடுகளை பொதுமக்களின் பாவனைக்கு படையினர் வழங்கியதாக வெளிவந்த செய்தியை படைத்தரப்பு மறுத்துள்ளது.

இதுதொடர்பாக கருத்துத் தெரிவித்த, இராணுவப் பேச்சாளர் கேணல் சுமேத பெரேரா, உயர்பார்துகாப்பு வலயப் பகுதிகளுக்கு வெளியே இருந்த - இடம்பெயர்ந்த மக்களின் 17 வீடுகளையே படையினர் கையளித்தனர்.

உயர்பாதுகாப்பு வலயத்திற்கு வெளியே இருந்து பொதுமக்களிடம் கையளிக்கப்பட்ட இந்தப் 17 வீடுகளால் உயர்பாதுகாப்பு வலயத்திற்கு எவ்வித அச்சுறுத்தலும் ஏற்படாது.

சாவகச்சேரி நகரசபை கேட்டுக் கொண்ட தற்கிணங்க 52 ஆவது படையணியின் தளபதி பிரிகேடியர் சி.ஏ.சந்திரசிறியால், இந்த வீடுகள் உரியவர்களிடம் கையளிக்கப்பட்டன.

இதேவேளை, இந்த வீடுகள் தமது கட்சி எடுத்த முயற்சி காரணமாகவே உரிமை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சி கடலில் அத்துமீறிய 11 இந்திய மீனவர்கள் கைது!

(வடமராட்சி)

வடமராட்சி கடற்பரப்பில் அத்துமீறி மீன் பிடித்த இந்திய மீனர்வர்களின் இரு படகுகளும், 11 மீனவர்களும் சக்கோட்டை, இன்பருட்டி மீனவர்களால் பிடிக்கப்பட்டு, இன்று அதிகாலை 12.50 மணியளவில் பருத்தித்துறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். மேலும் நான்கிற்கும் மேற்பட்ட படகுகள் நடுக்கடலில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் பற்றி தெரியவருவதாவது - வடமராட்சி வடக்கு கடலில் அத்துமீறி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அத்துருகிரிய விவகாரம்; கட்டாய லீவில் உடுகம்பொல!

(கொழும்பு)

அத்துருகிரிய மிலேனியம் சிற்றியில் இருந்த இராணுவ மறைவிடத்தில் நடத்தப்பட்ட தேடுதலுக்கு தலைமை தாங்கிய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் குலசிறி உடுகம்பொல நேற்றுமுன்தினம் கட்டாய ஓய்வில் அனுப்பப்பட்டார்.

அத்துருகிரிய தேடுதல் சம்பந்தமாக விசாரணை நடத்திய ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கையின்படி, உதவிப் பொலீஸ அத்தியட்சகர் உடுகம்பொலவுக்கு எதிராக

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தபால் மூலம் வாக்களிப்பதற்கு 23 வரை விண்ணப்பிக்கலாம்!

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத்தேர்தலில் தபால் மூலம் வாக்களிக்க விரும்புவோர் இந்த மாதம் 16 ஆம் திகதி முதல் 23 ஆம் திகதிவரை விண்ணப்பங்களை அனுப்பிவைக்கலாமென, தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க நேற்று அறிவித்தார்.

தேர்தல் கடமையில் ஈடுபடவுள்ள அரசாங்க ஊழியர்கள், முப்படைகள் பொலிஸ் படையைச் சேர்ந்தவர்கள், பொதுப்போக்குவரத்துச் சேவையை மேற்கொள்ளும் ஊழியர்களுக்கும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மத்திய குழுவைக் கூட்ட தடையுத்தரவு நீடிப்பு!

(கொழும்பு)

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவரின் எழுத்து மூல அனுமதியில்லாமல் அக்கட்சியின் மத்திய குழுவைக் கூட்டுவதற்கான இடைக்காலத் தடையுத்தரவு அடுத்த மாதம் 16 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக கொழும்பு மாவட்ட நீதிமன்றம், அந்தக் கட்சியின் பொதுச்செயலாளருக்கும், உபதலைவருக்கும் நேற்று அறிவித்தது.

இந்தத் தடையுத்தரவின் மூலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலுள்ள கூட்டணி உறுப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மக்களால் நிராகரிக்கப்பட்டவர்களுக்கு அமைச்சர் பதவி வழங்குவது நீதியற்றது!

### ஊடகவியலாளர் மாநாட்டில் எஸ்.பி.திஸநாயக்க

(கொழும்பு)

2001 ஆம் ஆண்டில் மக்களால் நிராகரிக்கப்பட்ட அமைச்சரவையின் உறுப்பினர்களாக இருந்த இருவரை, தற்போதைய அமைச்சரவையில் ஜனாதிபதி உள்ளீர்த்தமையானது நீதிக்குப் புறம்பான செயலாகுமென - அமைச்சர் எஸ்.பி திஸநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் பேசும்போதே - அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பொதுஜன ஐக்கிய முன்னணியும், ஜே.வி.பியும் இணைந்து செயற்படுத்தப்போகும் பொருளாதாரம் - வடகொரியாவில் மாத்திரமே நடைமுறையில் இருந்தது.

பொதுஜன ஐக்கிய முன்னணி - ஐக்கிய தேசிய முன்னணியிடம் ஆட்சியை ஒப்படைத்த போது, பொருளாதார வளர்ச்சி மறைப்பெறுமானத்தில் காணப்பட்டது.


எனினும், ஐ.தே.க. அரசாங்கம் பொருளாதாரத்தில் வளர்ச்சி நிலையை ஏற்படுத்தியது. விவசாயத்துறை தற்சமயம் 28 சதவீத வளர்ச்சியைப் பெற்றுள்ளது.

பொதுஜன ஐக்கிய முன்னணியினால், நெல்லின் உத்தரவாத விலையை எட்டு ரூபாவாகவேனும் தக்கவைக்க முடியவில்லை. ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் அதனை 13 ரூபாவாக நிலைப்படுத்தியது. நெல்லின் உத்தரவாத விலை நேற்றுமுதல் 15 ரூபாவாக அதிகரிக்கப்பட்டிருக்கிறது.


ஜனாதிபதி நாடாளுமன்றத்தைக் கலைத்த பின்னர் நாம் இந்தியாவுக்கு தப்பிச் சென்றுவிட்டதாக சில ஊடகங்கள் தகவல் வெளியிட்டன. இது பொய்யான தகவல் ஆகும். மனோ - மலிக் பேச்சுவார்த்தையில் இணக்கம் ஏற்படப்போவதாகவும், நாடாளுமன்றம் கலைக்கப்படாது என்ற நிலையிலுமே தாம் இந்தியா சென்றதாக எஸ்.பி.திஸநாயக்க மேலும் தெரிவித்தார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 - 2223891, 2226297
071-2348888, 071-2349999, 011-4512666, 011-2360290, 011-2360291
...ail :- jaffna@expoavi.com, reservations@expoavi.com
எக்ஸ்போஎயார்
வான் வெளியில் உங்கள் நண்பன்...
EXPOAIR
your friend in the skies...









மகளிர் அரசியல் பிரிவினரால் நடத்தப்பட்ட மகளிருக்கான தடகளப் போட்டி நிகழ்வில் யாழ்.மாவட்ட துணை அரசியல் துறைப் பொறுப்பாளர் செம்மணன் உரை நிகழ்த்துவதையும், தமிழீழ விளையாட்டுத்துறைப் பெண்கள் பொறுப்பாளர் ஆரபி வெற்றிபெற்ற இருவருக்கு பரிசுவழங்குவதையும், தட்டெறிதல் போட்டி இடம்பெறுவதையும் படங்களில் காணலாம்.

## ஆன்மிகச் சொற்பொழிவு

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சின் யாழ்.மாவட்ட பிராந்திய அலுவலகம் நடாத்தும் 65 ஆவது தொடர் ஆன்மீகச் சொற்பொழிவு, நாளை பி.ப 5.30 மணிக்கு அமைச்சின் உதவிப் பணிப்பாளர் சிவ.மகாலிங்கம் தலைமையில் இடம்பெறும்

'தாயுமான சுவாமிகளின் சிந்தனைகள்' என்ற பொருளில் மனோஜ். ஐயாத்துரை சொற்பொழிவாற்றுவார்.

## காசோலை வழங்கல்

தேசிய சேமிப்பு வங்கியின் சேமிப்புக் கணக்குகளுக்கான இலவச ஆயுட்காப்புறுதி வழங்கும் திட்டத் திற்கமைய சுன்னாகம் தேசிய சேமிப்பு வங்கிக் கிளையில் முதலாவது பயன்பெறுநருக்கு காசோலை வழங்கும் நிகழ்ச்சி - இன்று வங்கிக் கிளையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் உடுவில் பிரதேச செயலர் திருவாகரன் பயன்பெறுநருக்கு காசோலை வழங்குவார்.

## சுன்னாகம் ப.நோ.கூ. சங்க இயக்குநர் சபை தெரிவு

சுன்னாகம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் இயக்குநர் சபைத் தெரிவு கூட்டுறவுப் பரிசோதகர் செ. திருச்செல்வம் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது, தலைவராக சி.குமரவேல், உபதலைவர் சு.செல்லப்பா, இயக்குநர்களாக செ.இலகுநாதன், இ.பரமேஸ்வரலிங்கம், ந.வயிரவநாதன், சு.சுதாகர், பா.பாலகௌரி, ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டனர்.

## மணவாளக்கோல விழா

உரும்பிராய் கருணாகரப்பிள்ளையார் கோவில் மணவாளக்கோல விழா இன்று காலை 9 மணிக்கு சங்காபிஷேக கிரியைகளுடன் ஆரம்பமாகும். தொடர்ந்து விசேட பூசையும், அன்னதானம் வழங்கலும் இடம்பெறும்.

# சைவபரிபாலன சபை நடத்திய பண்ணிசைப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

சைவபரிபாலன சபை, மாணவர்களிடையே நடத்திவரும் பண்ணிசைப்போட்டிகளில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற போட்டியின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

### கீழ் பிரிவு

முதலாமிடம் ஜானகி (யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை), இரண்டாமிடம் கே.வர்சினி (மகாஜனாக கல்லூரி), மூன்றாமிடம் வி.தர்ஷனா (மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்)

### மத்திய பிரிவு

முதலாமிடம் ச.சங்கீதா (மானிப்பாய் மகளிர் கல்லூரி), இரண்டா மிடம் அ.தசாங்கன் (யூனியன்கல்லூரி), மூன்றாமிடம பகீத்தன (மானிப்பாய் இந்துக் கல்லூரி)

### மேற்பிரிவு

முதலாமிடம் தெ.பவனுஜா (வேம்படி மகளிர் கல்லூரி), இரண்டாமிடம் வைஷ்ணவி(மானிப்பாய் மெமோறியல்கல்லூரி), மூன்றாமிடம் ஜெகதீசன் (யூனியன் கல்லூரி) ஆகியோர் பெற்றுள்ளனர்.

இந்தப் போட்டியில் முதலிடத்தைப் பெற்றவர்களுக்கு தங்கப் பதக்கமும், இரண்டாம் இடத்தைப் பெற்றவர்களுக்கு வெள்ளிப்பதக்கமும், மூன்றாம் இடத்தைப் பெற்றவர்களுக்கு வெள்ளிப் பதக்கமும் வழங்கப்படவுள்ளன.

இவர்களுக்கான பரிசில்கள் எதிர்வரும் 19 ஆம் திகதி நடைபெறவிருக்கும் புண்ணியநாச்சியார் குருபூசை தினத்தில் வழங்கப்படுமென தேர்வுச் செயலர் வ.கந்தசாமி தெரிவித்தார்.

## நிதர்சனத்தின் 'புதிர்கள்' நூல் அறிமுகவிழா

(பளை)

யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாக ஆங்கில விரிவுரையாளர் கந்தையா ஸ்ரீகணேசன் எழுதிய நிதர்சனத்தின் புதிர்கள் நூல் அறிமுகவிழா இன்றுமாலை 2.30 மணிக்கு இயக்கச்சி அரசினர் வைத்தியசாலையில் நடைபெறவுள்ளது.

இயக்கச்சி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை அதிபர் இ.இராசம்மா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் - கிளிநொச்சி வலய கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

பளைக் கோட்ட கல்விப் பணிப்பாளர் அ.கைலாயபிள்ளை சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்வார்.

இந்த நூலின் அறிமுகவுரையை, கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் பொன்.தில்லைநாதன், சோரன்பற்று கணேசா வித்தியாலய ஆசிரியர் இ.கோகுலராகவன் ஆகியோர் நிகழ்த்துவர். (115)


## சிறு விளம்பரம்

### மணமகள் தேவை

யாழ்.இந்து (செங்குந்தா) குடும்பத்தைச் சேர்ந்த 36 வயதுடைய, ரேவதி நட்சத்திரம் கொண்ட பிரபல கல்லூரி ஆசிரியர்க்கு பெற்றோர் மணமகளைத் தேடுகிறார்கள்.

தொடர்புக்கு:- எம்.பி.ஸ்ரனிஸ்லாஸ் (மேக்கப்), 1/1, றக்கா ஒழுங்கை, யாழ்ப்பாணம். (628)

இதோ! மூன்று படம் இலவசம்!!

எமது நிறுவனத்தில் பிரதியாக்கம்செய்யும் சகல விதமான புகைப்படச் சுருள்களுக்கும் மூன்று புகைப்படம் இலவசமாக வழங்கப்படும். உங்கள் புகைப்படச் சுருள்களைப் பெற்றுக்கொள்ள

ஸ்கை எலக்ரோனிக்ஸ்
10 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்

லேன் சண்,
119, கண்டி வீதி,
சாவகச்சேரி

மூர்த்தி ஸ்ருடியோ அன் கலர் லாப்
பிரதான வீதி மானிப்பாய்.
T.P:- 021-222-2884
(சி-2212)



பாராட்டி வாழ்த்துகின்றோம்

5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை 2003 இல் 138 புள்ளிகளைப்பெற்றுச் சித்தியடைந்ததையிட்டு

செல்வி. தேவதயாளன் ராகவி

அவர்களையும் அவர்களுக்கு கல்வியறிவூட்டி ஆக்கமும், ஊக்கமும் அளித்தவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம். மேலும் அவர் சிறப்புக்களைப்பெற இறை ஆசியையும் வேண்டுகின்றோம்.

வாழ்த்துவோர்
பூலோகராஜா, தேவகுணாளன், இராஜேஸ்வரி குடும்பங்கள்
(சி-2215)

யசோ இறபர் ஸ்டாம்
75/=
பொலிமர் கொம்பியூட்டர் இறபர் சீல் ரூபா 75/= மட்டுமே
யசோ (PVT) லிமிட்டட்,
35, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம். (சி/2152)

நிறைஞ்சனலஸ் சங்கானை
பாலா, சர்மி நடித்த
காதல் கிசு கிசு
காட்சி நேரம்:11.00, 2.45, 6.00, (பு.நே.)
ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)
HULK
(சி-2196)

ராஜா யாழ்ப்பாணம்.
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு
பிரசாந், தியாகராஜன், பானுப்பிரியா நடித்த
ஜெய்
காட்சிநேரம் : 10.30, 2.30, 6.30 (பு.நே)
18 ஆம் திகதியிலிருந்து
எங்கள் அண்ணா
(சி-2197)

அழகும், கலைத்துவமும் மிக்க நவீன முறையிலான நம்பகமான இடம்

சுரபி பதிப்பகம்

பத்திரிகைகள், விழாமலர்கள் சஞ்சிகைகள், சுவரொட்டிகள், பிரசுரங்கள், அழைப்பிதழ்கள் அனைத்தையும் உங்கள் மனநிறைவுக்கேற்ப அச்சிட்டுப்பெற்றுக்கொள்ள நாடுங்கள்

சுரபி பதிப்பகம்

267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 021-2225107

# அணுசக்தியைப் பெற்றுக்கொள்வதில் விடுதலைப் புலிகள் அக்கறையாம்!

## சிங்கள இணையத்தளம் கூறுகிறது

(கொழும்பு)

**அணுசக்தி ஆற்றலைப் பெற்றுக்கொள்வதில் விடுதலைப் புலிகள் அக்கறை கொண்டிருப்பதாக சிங்கள இணையத்தளம் ஒன்று திரிபுபடுத்தி செய்தி ஒன்றை வெளியிட்டிருக்கிறது.**

**இந்த அணுவாயுதக் கருவிகள் விற்கப்பட்ட சம்பவத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் தொடர்புகள் இருக்கலாம் எனச் சந்தேகத்தைக் கிளப்பும் வகையில் வெளியிடப்பட்டிருக்கும் இந்தச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -**

லிபியாவின் அணுவாயுதத் திட்டத்திற்கு - அணுசக்தியைப் பிரித்தெடுக்கும் கருவியை விநியோகித்த சம்பவத்துடன் இலங்கையைச் சேர்ந்த வர்த்தகரான பி.எஸ்.ஏ.தாஹிர் என்பவர் தொடர்புபட்டிருப்பதாக வெளியான செய்திகள் - இலங்கையின் பாதுகாப்பு வட்டாரங்களின் விழிகளை ஆச்சரியத்திலாழ்த்தியிருக்கிறது.

லிபியா, ஈரான், வடகொரியா ஆகிய நாடுகளுக்கு, பாகிஸ்தான் அணு விஞ்ஞானி அப்துல்காதர் கான் அணு ஆயுதத் திட்ட இரகசியங்களை கடத்தியதான தகவல் வெளிச்சத்திற்கு வந்ததையடுத்தே, இலங்கை வர்த்தகர் பற்றிப் பாதுகாப்பு வட்டாரங்களும் விழிப்படைந்தன.

டுபாயில் தொழில்நுட்ப நிறுவனத்தில் இருந்த இலங்கையைச் சேர்ந்த தாஹிர் மலேசியாவில் இயங்கும் தொழிற்சாலையிலிருந்து, லிபிய அரசாங்கத்துக்கு யுரேனியத்தை பிரித்தெடுக்கும் உபகரணங்களை வாங்கிக்கொடுத்தார். அந்த உபகரணங்கள் மூலம் பரந்துபட்ட 2 யுரேனியத்தை ஒன்று சேர்க்கமுடியும். மலேசியாவில் இருக்கும் இந்தத் தொழிற்சாலையில் மலேசியப் பிரதமரின் மகனான கமால்தீன் அப்துல்லாவிற்கு பங்குள்ளது.

இவ்வாறு மலேசியாவிலிருந்து இந்த உபகரணங்களை லிபியாவிற்கு கப்பல் ஏற்றிச்சென்றபோதும், அவை என்ன தேவைக்காகப் பாவிக்கப்படவுள்ளன என்பதை அவர்கள் தெரிவிக்கவில்லை என மலேசியப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த உபகரணங்கள் மூலம் தண்ணீர் சுத்திகரிப்பு, உயிரியல் மூலகங்களைப் பிரித்துப் பார்த்தல், பெற்றோலியம், இரசாயனப் பொருட்களைப் பிரித்துப் பார்ப்பதற்கு இவை பயன்படுத்தப்படுவதனால், இதில் சந்தேகம் ஏற்படவில்லை எனவும் மலேசியப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு நான்கு கப்பல்களில் 14 தொகுதிகளாக இந்த உபகரணங்கள் கொண்டுசெல்லப்பட்டதாகவும், இறுதித் தொகுதி ஓகஸ்ட் 2003 ஆம் ஆண்டு கொண்டு செல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. இதன்பின்னர், மலேசிய தொழிற்சாலையில் இருந்து எவ்வித உபகரணங்களும் வாங்கவில்லை.

தொகுதி தொகுதியாக கொண்டுசெல்லப்பட்ட இந்த உபகரணங்களை ஒன்றிணைக்கும்போது, யுரேனியத்தினைப் பிரித்தெடுக்கும் இயந்திரம் உருவாகும்.

மேற்படி விடயங்கள் கடந்த மாதம் 15 ஆம் திகதிக்குப் பின்னர்தான் தெரியவந்தது. இதற்கு பின்னரே அணுசக்தி தொடர்பில் விடுதலைப் புலிகளுக்கு அதிக ஆர்வம் ஏற்பட்டதென கூறும் சிங்கள இணையத்தளம் - அதற்கு ஆதாரமாக இரண்டு காரணங்களை முன்வைத்துள்ளது.

முதலாவதாக - லிபியாவுடனான அணு வியாபாரத் தொடர்பில் தாஹிர் என்ற தமிழர் ஈடுபட்டுள்ளமை,

இரண்டாவதாக - தெல்லிப்பளை புற்றுநோய் வைத்தியசாலையை விடுதலைப் புலிகள் மீள ஆரம்பிக்க வற்புறுத்துவதாகும்.

புற்றுநோயாளர்களுக்கு கதிரியக்க உபகரணங்கள் மூலம் சிகிச்சை அளிக்கப்படும். இந்தக் கதிரியக்க உபகரணங்களை விடுதலைப் புலிகள் பெற்று வெளியில் கொண்டுசென்றால், பெருமளவானோரை அழிக்கலாம். இதனாலேயே விடுதலைப் புலிகள் தெல்லிப்பளை வைத்தியசாலையை இயங்க வைக்க வற்புறுத்தி வருகின்றார்கள்.

இந்தியாவுடன் விடுதலைப் புலிகளுக்குத் தொடர்பில்லை. இந்த அணுசக்தியை புலிகள் பெற்றுவிட்டால், அதனைக் காட்டியே இந்தியாவுடன் தொடர்பினை மீள ஏற்படுத்தலாம் என புலிகள் நினைக்கின்றார்கள் எனவும் அந்த இணையத்தளம் மேலும் தெரிவித்துள்ளது.

## அம்பாந்தோட்டையில் போட்டி; மஹிந்தராஜபக்ஷ தெரிவிப்பு!

(கொழும்பு)

வரப்போகும் நாடாளுமன்றத் தேர்தலில் தாம் அம்பாந்தோட்டை மாவட்டத்திலேயே போட்டியிட விரும்புவதாக முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

இது குறித்து மஹிந்த ராஜபக்ஷ தனியார் வானொலி ஒன்றுக்கு தகவல் வெளியிடுகையில் -

தெற்கிலிருந்து வந்த நான் அம்பாந்தோட்டையிலிருந்து விலகி கொழும்பில் போட்டியிட விரும்பவில்லை எனத் தெரிவித்தார்.

இதேவேளை -

கொழும்பில் போட்டியிட மஹிந்த ராஜபக்ஷ மறுத்துள்ளதால் கொழும்பு மாவட்டத்தின் முதன்மை வேட்பாளரான மங்கள சமரவீரவை சிறிலங்கா சுதந்திரக்கட்சி நியமிக்கவிருப்பதாக உத்தியோகபூர்வமற்ற தகவல்கள் கிடைக்கின்றன.

## குற்றச்செயல்களைத் தடுப்பதற்கு தேசிய ஆலோசனை சபை அமைப்பு!

### ஜனாதிபதி செயலகம் அறிவிப்பு

(கொழும்பு)

அதிகரித்துவரும் குற்றச்செயல்களை தடுப்பதற்காக 13 பேர் கொண்ட தேசிய ஆலோசனை சபை ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலகம் அறிவித்தது.

இது தொடர்பாக ஜனாதிபதி செயலகம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் ஜனாதிபதி மாளிகையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே இந்தச் சபை நியமிக்கப்பட்டது.

குற்றச்செயல்களைத் தடுப்பதற்கான கொள்கைகள் வகுக்கும்போதும், நடைமுறைப்படுத்தும்போதும், அரசுக்கும் பொலிஸாருக்கும் தேவையான ஆலோசனைகளை வழங்குவதே இந்தச் சபையின் பிரதான நோக்கம்.

சமயத் தலைவர்கள், பொலிஸ் அதிகாரிகள், அரச சார்பற்ற அமைப்புகளின் தலைவர்கள், கல்விமான்கள், வர்த்தகர்கள் ஆகியோர் இந்தச் சபையில் அங்கம் வகிக்கின்றனர்.

பேராசிரியர் பெல்லந்தல விமலரத்ன தேரர் இந்த ஆலோசனை சபைக்குத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

குற்றச் செயல்களின் அதிகரிப்பு நீண்ட காலமாக ஏற்பட்டு வருகின்றமை பற்றி ஜனாதிபதி இந்தக் கலந்துரையாடலின்போது தெரிவித்தார்.

இந்த ஆலோசனை சபையின் ஓர் பிரதேச மட்டத்தில் பிரஜைகள் குழுக்கள் நியமிப்பதோடு, இந்தச் சபையில் 15 உறுப்பினர்கள் அங்கம் வகிப்பார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புதிய கூட்டணி பட்டியலில் 42 ஜே.வி.பி. வேட்பாளர்கள்!

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் ஜே.வி.பியும் இணைந்து உருவாக்கிய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் நாற்பத்திரண்டு ஜே.வி.பி வேட்பாளர்கள் நாடாளுமன்றத் தேர்தலல் போட்டியிடவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது. இது குறித்து தகவல் வெளியிட்ட சிறிலங்கா சுந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் மைத்திரிபாலசிறிசேன -

கூட்டணியிலுள்ள ஏனைய கட்சிகளின் வேட்பாளர்கள் எத்தனைபேர் போட்டியிடுவதென்பது இன்னமும் முடிவாகவில்லை என்றும் பொ.ஐ. முன்னணியில் இடம்பெற்றுள்ள கட்சிகள் செய்துகொண்ட உடன்பாட்டிற்கமைவாக வேட்பாளர்கள் நியமிக்கப்படுவார்கள் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## வன்முறையற்ற பொதுத் தேர்தலுக்கு அனைத்துக் கட்சிகளும் உதவ வேண்டும்

### சர்வோதய தலைவர் ஆரியரத்ன வேண்டுகோள்

(கொழும்பு)

நடைபெறவுள்ள பொதுத்தேர்தலை வன்முறைகளற்ற விதத்தில் நடத்துவதற்கு அரசியற்கட்சிகளும், அதன் தலைவர்களும், உதவி புரியவேண்டுமென சர்வோதய இயக்கத்தின் தலைவர் ஏ.ரி.ஆரியரத்தன வெளியிட்டுள்ள அறிக்கையில் கேட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

அரசியற்கட்சித் தலைவர்கள், அந்தக் கட்சிகளின் உறுப்பினர்கள், மகாசங்கத்தினர், மற்றும் பிறமதத் தலைவர்கள், சமூகத் தலைவர்கள அனைவரும் இந்தத் தேர்தல் காலப் பகுதியில் ஒன்றாக இணைந்து செயற்படவேண்டும்.

அத்துடன், தபால்மூலமான வாக்களிப்பின் போதும், வாக்களிப்பு நிலையங்களில் இடம்பெறும் வாக்களிப்பின் போதும், வன்செயல்கள் இடம்பெறாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

நடைபெறவுள்ள பொதுத்தேர்தலின் மூலம் சகல மக்களதும் விருப்பங்களை அறிந்து சமாதானத்தையும், அபிவிருத்தியையும் அர்ப்பணிப்புடன் ஏற்படுத்தக் கூடிய நல்ல ஆட்சிமுறை அமைய வேண்டும்.

தற்பொது சகலருக்குமிடையில் ஒற்றுமை ஏற்படாத நிலையிலேயே இந்த நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது.

தேர்தல் நடந்து அடுத்த நிலையான அரசு அமைக்கப்படும்வரை தற்போதைய அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே செய்துகொள்ளப்பட்ட போர்நிறுத்த உடன்படிக்கையை என்னவிலை கொடுத்தேனும் சகல கட்சிகளும் மதிப்பளித்து நடக்க வேண்டும்.

இந்த தேர்தல் காலத்தில் சகல அரசியற் கட்சிகள், சுதந்திரமான குழுக்கள், பொதுமக்கள் அனைவரும் ஊழல் - சட்டவிரோத நடவடிக்கைகள் இடம்பெறாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

அத்துடன், சுதந்திரமானதும், நீதியானதுமான தேர்தலை நடத்துவதற்கு சகல ஊடகங்களும் நடுவு நிலையுடன் செயற்படவேண்டுமெனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஐ.தே.கவின் வேட்பாளர் பட்டியல் இந்தவார இறுதியில் முடிவாகும்

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி - நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் பட்டியலை இந்தவார இறுதியில் முடிவுசெய்யும் என்று, ஐ.தே.கவின் செயலாளர் செனரத் கப்புகொட்டுவ தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய முன்னணியில் போட்டியிடவிருக்கும் வேட்பாளர்களைத் தெரிவுசெய்யும் பணிகளில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான வேட்பாளர் நியமனக்குழு ஈடுபட்டிருக்கிறது.

இந்தக் குழுவால் வேட்பாளர்களின் இறுதிப் பட்டியல் கட்சியின் நிறைவேற்றுக் குழுவுக்கு அனுப்பப்பட்டு உறுதி செய்யப்படும்.

வேட்பாளர்கள் தெரிவுசெய்யப்பட்டதும் கட்சியின் மாவட்ட தலைவர்களின் அபிப்பிராயங்கள் பெறப்பட்டு மாற்றங்கள் செய்யப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.



ஐரோப்பாவிற்கு சுற்றுப் பயணத்தை மேற்கொண்டுள்ள தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர் நெதர்லாந்து பிரதிவெளிவிவகார அமைச்சர் கேமன் ஸ்காப்பர் உட்பட அந்நாட்டு வெளியுறவு அதிகாரிகளுடன் நெதர்லாந்தில் கலந்துரையாடுவதைக் காணலாம்.

## எரிபொருள் நிலையங்களை இந்திய நிறுவனத்துக்கு விற்க இலங்கை அரசாங்கம் தயக்கம்!

இலங்கையிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களை இந்தியாவின் கம்பனிகளுக்கு புதிதாக குத்தகைக்கு விடுவதற்கு இலங்கை விரும்பவில்லையென செய்திகள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, இலங்கையின் எரிபொருள் விற்பனை நிலையங்களை வைத்திருக்கும் நான்கு வெளிநாட்டு நிறுவனங்களில் இரண்டு, இந்திய நிறுவனங்களாகும்.

எனவே - இனி புதிதாக இந்திய எண்ணெய் நிறுவனங்கள் இலங்கையில் எரிபொருள் விற்பனைக்குள் நுழைவதை இலங்கை விரும்பவில்லை.

இதற்குப் திலாக உள்ளூரிலேயே உள்ள கிழக்கு மேற்கு என்ற எண்ணெய்க் கம்பனிக்கு 100 மில்லியன் அமெரிக்க டொலருக்கு, எரிபொருள் நிலையங்களை குத்தகைக்குவிட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த உள்ளூர் நிறுவனம், வெளியிடங்களில் சிறிய அளவில் தமது எண்ணெய் வியாபார நிலையங்களைத் திறக்கவுள்ளது.

இதேவேளை - இந்த உள்ளூரில் இயங்கும் கிழக்கு - மேற்கு கம்பனியைவிட இந்திய, சீன கம்பனிகள் தரம் குறைவாக உள்ளதாகவும், எனவே அவற்றை தரமாக்குவதற்கு அந்தக் கம்பனிகள் நடவடிக்கை எடுத்து வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

### செப்ரெம்பர் 19 இல் தொடங்கவுள்ள

# 12 நாடுகள் பங்குபற்றும் கிரிக்கெட் போட்டியில் ஒரே பிரிவில் இந்தியா - பாகிஸ்தான் மோதல்!

இங்கிலாந்தில் நடைபெறவுள்ள ஐ.சி.சி சம்பியன் கிண்ண கிரிக்கெட் போட்டியில் ஒரே பிரிவில் இந்திய - பாகிஸ்தான் அணிகள் இடம் பெற்றுள்ளன. இவற்றுக்கிடையேயான ஆட்டம் செப்ரெம்பர் 19 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

ஐ.சி.சி சம்பியன் கிரிக்கெட் போட்டி 2 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெற்றுவருகின்றது. இதில் கடைசியாக 2002 ஆம் ஆண்டு கொழும்பில் நடந்த போட்டியில் இந்தியாவும், இலங்கையும் கூட்டாக சேர்ந்து சம்பியன் பட்டத்தை வென்றன.

இந்த நிலையில், 2004 ஆம் ஆண்டுக்கான சம்பியன் கிண்ண போட்டி வரும் செப்ரெம்பர் மாதம் 10 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதி வரை இங்கிலாந்தில் நடைபெறும்.

12 நாடுகள் பங்கேற்கும் இந்தப் போட்டியில் 4 பிரிவாக அணிகள் பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பிரிவிலும் தலா 3 அணிகள் இடம் பெறும். லீக் ஆட்டங்களின் முடிவில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் இடத்தைப் பிடிக்கும் அணி அரையிறுதிப் போட்டிக்கு முன்னேறும்.

இதில் இந்திய - பாகிஸ்தான் அணிகள் ஒரே பிரிவில் இடம்பிடித்துள்ளன. இதில் இடம்பெற்றுள்ள 3 ஆவது அணி கென்யாவாகும். இவை 'சி' பிரிவில் இடம்பெற்றுள்ளன.

'ஏ' பிரிவில் - அவுஸ்ரேலியா, நியூஸிலாந்து மற்றும் தகுதி சுற்றில் வெற்றிபெறும் அணிகள் இடம்பெற்றுள்ளன. 'பி' பிரிவில் - தென்னாபிரிக்கா, மேற்கிந்தியத் தீவுகள், பங்களாதேஷ் அணிகளும், 'டி' பிரிவில் - இலங்கை, இங்கிலாந்து, சிம்பாப்வே அணிகளும் இடம்பெற்றுள்ளன.

செப்ரெம்பர் 10 ஆம் திகதி தொடங்கும் இந்தப் போட்டியின் முதல நாள் ஆட்டத்தில் இங்கிலாந்து - சிம்பாப்வே அணிகள் மோதுகின்றன. சிம்பாப்வே பயணத்தை இங்கிலாந்து அணி ரத்துச் செய்ததால், இங்கிலாந்துக்கு எதிரான இந்த ஆட்டத்தை சிம்பாப்வே அணி புறக்கணிக்க வாய்ப்புள்ளது. மற்றொரு ஆட்டத்தில் நியூஸிலாந்தும் தகுதிச் சுற்றில் வெற்றிபெறும் அணியும் மோதுகின்றன.

இந்திய - பாகிஸ்தான் பலப் பரீட்சை நடத்தும் ஆட்டம் செப்ரெம்பர் 19 ஆம் திகதி எட்ஜ்பாஸ்டனில் நடைபெறும். இந்தத் தொடரின் இறுதியாட்டம் ஓவல் மைதானத்தில் செப்ரெம்பர் 25 ஆம் திகதி நடைபெறும். இந்தப் போட்டிக்கான அட்டவணையை சர்வதேச கிரிக்கெட்சபை வெளியிட்டுள்ளது.

| | |
|---|---|
| செப் 10:- | சிம்பாப்வே - இங்கிலாந்து, நியூஸிலாந்து - தகுதிச்சுற்றில் வெற்றிபெறும் அணி. |
| செப் 11:- | இந்தியா - கென்யா |
| செப் 12:- | தென்னாபிரிக்கா - பங்களாதேஷ் |
| செப் 13:- | அவுஸ்ரேலியா - தகுதி சுற்றில் வெற்றிபெறும் அணி |
| செப் 14:- | பாகிஸ்தான் - கென்யா, இலங்கை - சிம்பாப்வே |
| செப் 15:- | மேற்கிந்தியத்தீவுகள் - பங்களாதேஷ். |
| செப் 16:- | அவுஸ்ரேலியா - நியூஸிலாந்து |
| செப் 17:- | இலங்கை - இங்கிலாந்து |
| செப் 18:- | தென்னாபிரிக்கா - மேற்கிந்தியத்தீவுகள் |
| செப் 19:- | இந்தியா - பாகிஸ்தான் |
| செப் 21:- | முதல் அரை இறுதி 'ஏ' பிரிவில் முதலிடம் - 'டி' பிரிவில் முதலிடம் |
| செப் 22:- | 2 ஆவது அரை இறுதி 'பி' பிரிவில் முதலிடம் - 'சி' பிரிவில் முதலிடம். |
| செப் 25:- | இறுதிப் போட்டி |

### இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

மட்டுவில் வடக்கு சந்திரமௌலீச வித்தியாசாலையின் வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டிகள் நாளை பி.ப 2.30 மணியளவில் பாடசாலை அதிபர் செ.சிவஞானம் தலைமையில் இடம்பெறும்.

பாடசாலை விளையாட்டு மைதானம் மிகக்குறுகிய நிலப்பரப்பினைக் கொண்டிருப்பதால், பெரும்பாலான விளையாட்டுக்கள் ஏற்கனவே நடத்தி முடிக்கப்பட்டுள்ளதாகவும், முக்கிய ஒரு சில விளையாட்டுக்களும் பரிசளிப்பு நிகழ்வும் மட்டுமே அன்றைய தினம் இடம்பெறும் என பாடசாலை அதிபர் தெரிவித்தார். (24)

# நதன் அஸ்ரிலுக்கு சத்திர சிகிச்சை!



நியூஸிலாந்து அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரர்களில் ஒருவரான, நதன் அஸ்ரில் மீண்டும் சத்திர சிகிச்சை செய்யவுள்ளார். இந்தச் சத்திர சிகிச்சை இன்று நடைபெறவுள்ளது. இதன் காரணமாக, தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஒருநாள் தொடர் மற்றும் டெஸ்ட்டில் இவர் விளையாடமாட்டார். ஒரு நாள் தொடர் நாளை ஆரம்பமாகின்றது.

நதன் அஸ்ரில் இந்திய சுற்றுப் பயணத்தை பாதியில் முடித்துக் கொண்டு முழங்காலில் சத்திரசிகிச்சை செய்துகொண்டார். இதனால் இந்தியாவில் நடந்த 3 நாடுகள் போட்டியில் விளையாடவில்லை. இந்தச் சத்திர சிகிச்சையில் முழுத்திருப்தி இல்லாததால் மீண்டும் சிகிச்சை செய்யவுள்ளார்.

## விளையாட்டு

# வடமராட்சி வலயமட்ட பாடசாலைகளின் வலைப்பந்தாட்டப் போட்டி முடிவுகள்!

பருத்தித்துறை கோட்ட மட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான வலைப்பந்தாட்டப் போட்டி நிகழ்வில், நேற்றுமுன்தினம் நடைபெற்ற போட்டியில் - 17 வயது 'ஏ' பிரிவில் வட இந்து மகளிர் கல்லூரியை எதிர்த்து வல்வை சிவகுரு வித்தியாலயம் மோதியது. இதில் வல்வை சிவகுரு வித்தியாலயத்தை எந்த கோலும் எடுக்கவைக்காது வட இந்து மகளிர் கல்லூரி 66 கோல்களைப் பெற்றது. இது இந்த மைதானத்தின் சாதனையாகக் கருதப்படுகிறது.

15 வயது 'ஏ' பிரிவில், மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையை எதிர்த்து வல்வை சிவகுரு வித்தியாலயம் மோதியது. இதில் வல்வை சிவகுரு வித்தியாலயத்தை ஒரு கோலும் எடுக்கவிடாது மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை 19 புள்ளிகளைப் பெற்று வெற்றியீட்டியது.

15 வயது 'பி' பிரிவில் - புற்றளை மகாவித்தியாலம் எதிர் தொண்டமானாறு மகாவித்தியாலயம் மோதின. இந்த இரண்டு அணிகளும் தலா 3 கோல்களைப் பெற்று சமமான புள்ளிகளைப் பெற்றன. (12)

# பந்துவீச்சாளர் ஷேன்வோர்ன் மீண்டும் களம் திரும்பினார்



(மெல்போர்ன்)

அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணியின் முன்னணி சுழற்பந்து வீச்சாளர்களில் ஒருவரான ஷேன் வோர்ன் ஊக்க மருந்து பயன்படுத்தியது கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து, கடந்த பெப்ரவரி மாதம் உலகக் கிண்ணப்போட்டிக்கு முன்பு அணியிலிருந்து நீக்கப்பட்டார். மேலும், அவருக்கு ஒரு வருடம் போட்டிகளில் விளையாடத் தடைவிதிக்கப்பட்டது.

இந்தநிலையில், வோர்ன் மீதான தடை கடந்த திங்கட்கிழமை முடிவடைந்தது. அதனைத் தொடர்ந்து நேற்றுமுன்தினம் நடந்த ஆட்டமொன்றில் வோர்ன் விளையாடினார்.

மெல்பேர்னில் நடந்த குயின்ஸ்லாந்துக்கு எதிரான ஆட்டத்தில் விக்டோரியன் லெவன் அணிக்காக வோர்ன் ஆடினார். இதில் விக்டோரியா லெவன் 5 விக்கெட் இழப்புக்கு 379 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை முடித்துக் கொண்டது. துடுப்பாட்டத்தில் வோர்ன் 11 ஓட்டங்களைப் பெற்றார்.

பின்னர் ஆடிய குயின்ஸ் லாந்து அணி 1 விக்கெட்டுக்கு 87 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது மழையால் ஆட்டம் தடைப்பட்டது. இதனால், வோர்ன் பந்துவீசும் வாய்ப்புப் பறிபோனது.

### சர்வதேச தரப்படுத்தல் பட்டியலில்

# துடுப்பாட்டம் மற்றும் பந்துவீச்சில் தென்னாபிரிக்க வீரர்கள் முதலிடம்

ஒருநாள் கிரிக்கெட் போட்டியின் அடிப்படையில் - அணிகள் மற்றும் வீரர்களின் வரிசைப்பட்டியலை சர்வதேச கிரிக்கெட்சபை வெளியிட்டுள்ளது.

அணிகளின் வரிசைப் பட்டியலில் தொடர்ந்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திவரும் உலகச் சாம்பியனான அவுஸ்ரேலியா முதலிடத்தில் உள்ளது. அந்த அணி 137 புள்ளிகளுடன் இந்த இடத்தில் உள்ளது.

119 புள்ளிகளுடன் தென்னாபிரிக்கா 2 ஆவது இடத்திலும், 107 புள்ளிகளுடன் பாகிஸ்தான் 3 ஆவது இடத்திலும். இலங்கை அதே புள்ளியுடன் நான்காவது இடத்திலும், 106 புள்ளிகளுடன் இங்கிலாந்து 5 ஆவது இடத்திலும் உள்ளன.

105 புள்ளிகள் பெற்றுள்ள இந்தியா 6 ஆவது இடத்தில் உள்ளது. நியூஸிலாந்து 102 புள்ளிகளுடன் 7 ஆவது இடத்திலும், மேற்கிந்தியத் தீவுகள் 100 புள்ளிகளுடன் 8 ஆவது இடத்திலும், சிம்பாப்வே 66 புள்ளிகளுடன் 9 ஆவது இடத்திலும், 28 புள்ளிகளுடன் கென்யா 10 ஆவது இடத்திலும் உள்ளன. புள்ளிகள் எதுவும் பெறாத பங்களா தேஷ் 11 ஆவது இடத்திலும் உளளது.

துடுப்பாட்ட வரிசையில் தென்னாபிரிக்க வீரர் கலிஸ் 816 புள்ளிகள் பெற்று முதலிடத்துக்கு முன்னேறியுள்ளார். அவருக்கு அடுத்தபடியாக அவுஸ்ரேலிய வீரர் கில்கிறிஸ்ட் 815 புள்ளிகளுடன் 2 ஆவது இடத்தில் உள்ளார். மேற்கிந்தியத்தீவுகள் அணி வீரர் கெய்ல் 797 புள்ளிகளுடன் 3 ஆவது இடத்தில் உள்ளார்.

இந்திய அணியின் நட்சத்திர துடுப்பாட்டவீரர் சச்சின் டெண்டுல்கர் 4 ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளார். மைக்கல் பெவன் (அவுஸ்ரேலியா), ரிக்கி பொன்டிங் (அவுஸ்ரேலியா), ஜெயசூர்யா (இலங்கை), யுகானா (பாகிஸ்தான்), லாரா (மேற்கிந்தியத்தீவுகள்), ஹைடன் (அவுஸ்ரேலியா) ஆகியோர் முறையே 5 முதல் 10 இடங்கள் வரை பிடித்துள்ளனர்.

பந்துவீச்சில் தென்னாபிரிக்க வீரர் பொலக் 922 புள்ளிகள் பெற்று முதலிடத்தில் உள்ளார்.

இலங்கை வீரர்களில் முரளிதரன் 911 புள்ளிகளுடன் 2 ஆவது இடத்திலும், சமிந்த வாஸ் 836 புள்ளிகளுடன் 3 ஆவது இடத்திலும் உள்ளனர்.

பிரட் லீ (அவுஸ்ரேலியா), மெக்ராத் (அவுஸ்ரேலியா), பிளின்ரொவ் (இங்கிலாந்து), என்ரினி (தென்னாபிரிக்கா), ஜிலெஸ்பி (அவுஸ்ரேலியா), ஜேக்கப் ஓரம் (நியூஸிலாந்து), அன்டர்சன் (இங்கிலாந்து) ஆகியோர் முறையே 4 முதல் 10 இடங்களில் உள்ளனர்.

### தேர்தல் வியூகம் குறித்து விவாதிக்க

# சோனியாகாந்தி - கருணாநிதி நாளை சந்தித்து பேச்சு நடத்துவர்



(சென்னை)

தி.மு.க தலைவர் கருணாநிதியை சந்திப்பதற்காக காங்கிரஸ் தலைவர் சோனியாகாந்தி நாளை சென்னைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

தமிழகத்தில் தி.மு.க தலைமையிலான ஜனநாயக முற்போக்கு கூட்டணியில் காங்கிரஸ் கட்சியும் இடம்பெற்றுள்ளது. தொகுதிப் பங்கீடு முடிவடைந்துள்ள நிலையில் தேர்தல் வியூகம் குறித்து விவாதிப்பதற்காகவும், கருணாநிதியை நேரில் சந்திப்பதற்காகவும் சோனியாகாந்தி சென்னை வருகிறார்.

நாளை சென்னை வரும் அவர் பி.ப 3 மணிக்கு கருணாநிதியை சந்தித்துப் பேசுவார். அப்போது தேர்தல் வியூகம், பாண்டிச்சேரி தொகுதி தொடர்பான சர்ச்சைகள் குறித்து விவாதிக்கவுள்ளார்.

சோனியா காந்தியின் சென்னை வருகையின்போது சென்னை நகரில மேற்கொள்ளப்படவேண்டிய பாதுகாப்பு



நடவடிக்கைகள் குறித்து தமிழக காவல்துறை அதிகாரிகளுடன் விவாதிப்பதற்காக சோனியாவின் பாதுகாப்புப்படை தலைமை அதிகாரி தினகர் நேற்றுமுன்தினம் சென்னை வந்தார்.

# வேட்பாளர் தெரிவில் பா.ஜ.கட்சி மும்முரம்!

தேர்தல் நடத்துவதற்கன ஏற்பாடுகளில் தேர்தல் ஆணையகம் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. இதேபோல் அரசியல் கட்சிகளும் கூட்டணி அமைப்பதிலும், தேர்தல் பிரசார வியூகங்கள் வகுப்பதிலும், வேட்பாளர் தேர்விலும் முழுக்கவனம் செலுத்திவருகின்றன.

பாரதீய ஜனதா இந்தத் தேர்தலில் 350 இற்கும் மேற்பட்ட வேட்பாளர்களை நிறுத்த ஆலோசித்து வருகிறது. ஒவ்வொரு மாநிலத் தலைவர்களுடனும், நிர்வாகிகளுடனும் பாரதிய ஜனதா தலைவர் வெங்கையா நாயுடு வேட்பாளர் தேர்வு தொடர்பாக ஆலோசனை நடத்தி வருகிறார்.

அடுத்த மாதம் முதல் வாரத்தில் பாரதீய ஜனதா வேட்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டு பட்டியல் வெளியாகிவிடும் என்று அந்தக்கட்சி அறிவித்துள்ளது.

யார் யாரை வேட்பாளராகத் தேர்வுசெய்யலாம் என்று மாநில வாரியாக கட்சி அமைத்த குழு, ஆய்வு நடத்தி முடித்துவிட்டது. இந்த மாத இறுதிக்குள் அந்த அறிக்கை கட்சி மேலிடத்துக்கு அனுப்பப்பட்டு விடும்.

நேற்றுமுன்தினம் துணைப்பிரதமர் அத்வானி, கட்சி தலைவர் வெங்கையா நாயுடு ஆகியோர் தேர்தல் வியூகம் மற்றும் வேட்பாளர் தேர்வு தொடர்பாக முக்கிய ஆலோசனைகள் நடத்தினார்கள். மாநிலங்களில் உள்ள பாரதீய ஜனதா அமைச்சர்களுடன் இன்னொரு கூட்டமும் நடைபெற்றது.

# சிறப்புற நடைபெற்று முடிந்த மகளிர் விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

மகளிர் அரசியற்துறையினரால் நடாத்தப்பட்ட பெண்களுக்கான விளையாட்டுப்போட்டிகள் - நேற்று முனதினம் சிறப்புற நிறைவுபெற்றன.

யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் காலை இரண்டாவது நாள் போட்டிகள் ஆரம்பமாகின. இதில் பொதுக்சுடரினை யாழ்.மாவட்ட அரசியற்துறை துணைப்பொறுப்பாளர் செம்மணன், தமிழீழ மாணவர் பேரவை இணைப்பாளர் கண்ணன் ஆகியோர் ஏற்றிவைக்க,

ஈகச்சுடரினை மாவீரர் கப்டன் வேலனின் தாயார் ஏற்றிவைத்தார். தமிழீழ தேசியக் கொடியினை மகளிர் அரசியற்துறை பொறுப்பாளர் கலைவிழி ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து பெண்களுக்கான தடகளப்போட்டிகள் இடம்பெற்றன.

மாலை 5 மணியளவில் பரிசில் வழங்கும் வைபவம் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் யாழ்.நல்லூர் கோட்ட தேசிய எழுச்சிப்பேரவைச் செயலாளர் சி.வி.கே.சிவஞானம், யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் தலைவர் சூ.சிறில், யாழ்.மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் றொகான் உட்படப் பல முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டனர்.

தொடர்ந்து வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்கள் வழங்கப்பட்டன.

இதில் கரப்பந்தாட்டத்திற்கான போட்டியில் முதலாம் இடத்திற்கான பரிசை பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழக அணியும், இரண்டாம் இடத்தை மல்லாகம் கிராம முன்னேற்றக்கழக அணியும் பெற்றுக்கொண்டன.

கிளித்தட்டுப் போட்டியில் முதலாம் இடத்திற்கான பரிசை - வளர்பிறை விளையாட்டுக்கழகமும், இரண்டாம் இடத்திற்கான பரிசை மல்லாகம் கிராம முன்னேற்றக்கழக அணியும் பெற்றுக்கொண்டன. தொடர்ந்து தடகள விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்கள் வழங்கப்பட்டன. (ப)

# இளைஞனை கைதுசெய்யப் போவதாக முகமாலையில் படையினர் அச்சுறுத்தல்!

## மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

முகமாலை சோதனைச்சாவடியில் வைத்து, படையினர் தன்னை அச்சுறுத்தி வருவதாக இளைஞர் ஒருவர் - மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

கொடிகாமத்தைச் சேர்ந்த வி.நிர்மலதாஸ் என்பவரே இந்த முறைப்பாட்டை செய்துள்ளார்.

இவரது முறைப்பாட்டில் தெரிவிக்கபடிட்டிருப்பதாவது - தான் வன்னியில் வயல் வேலை செய்வதற்காக, கொடிகாமத்திலிருந்து வன்னி சென்றுவிட்டு, மீண்டும் திரும்பி வரும் வேளைகளில் முகமாலைச் சோதனைச்சாவடியில் வைத்து சோதனை செய்யும் படையினர், கைதுசெய்யப்போவதாக அச்சுறுத்தி வருகின்றனர் எனவும், தமக்குப் பாதுகாப்பு வழங்குமாறு கோரியே மனித உரிமைகள் ஆணைக்குழுவில் செய்யப்பட்ட முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வடக்கு - கிழக்கு மாகாணத்தில் இருந்து 31 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவாவர்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாவட்டத்தில் ஐந்து தேர்தல் மாவட்டங்களில் இருந்தும் - 31 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்படவுள்ளனர் எனத் தேர்தல் திணைக்களம் அனுப்பிவைத்துள்ள சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இதற்கமைய - யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் ஒன்பது நாடாளுமன்ற உறுப்பினர்களும், வன்னி தேர்தல் மாவட்டத்திலிருந்து ஆறு நாடாளுமன்ற உறுப்பினர்களும், மட்டக்களப்பு தேர்தல் மாவட்டத்திலிருந்து ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்களும், திருகோணமலை தேர்தல் மாவட்டத்திலிருந்து நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்களும், திகாமடுல்ல தேர்தல் மாவட் டத்தில் ஏழு நாடாளுமன்ற உறுப்பினர்களும், தெரிவுசெய்யப்படவுளளனர்.

இவற்றைவிட, கொழும்பு தேர்தல் மாவட்டத்தில் இருபது நாடாளுமன்ற உறுப்பினர்களும், கம்பஹா தேர்தல் மாவட்டத்தில் பதினேழு நாடாளுமன்ற உறுப்பினர்களும், களுத்துறை தேர்தல் மாவட்டத்தில் பத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும், மஹநுவர தேர்தல் மாவட்டத்தில் பன்னிரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களும், மாத்தளை தேர்தல் மாவட்டத்தில் ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்களும்,

நுவரெலியா தேர்தல் மாவட்டத்தில் பத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும், மாத்தளை தேர்தல் மாவட்டத்தில் எட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களும், அம்பாந்தோட்டை தேர்தல் மாவட்டத்தில் ஏழு நாடாளுமன்ற உறுப்பினர்களும், குருநாகல் தேர்தல் மாவட்டத்தில் பதினாறு நாடாளுமன்ற உறுப்பினர்களும், புத்தளம் தேர்தல் மாவட்டத்தில் எட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களும், அநுராதபுரம் தேர்தல் மாவட்டத்தில் எட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களும், பொலநறுவை தேரதல் மாவட்டத்தில் ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்களும்,

பதுளை தேர்தல் மாவட்டத்தில் எட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களும், மொனராகல தேர்தல் மாவட்டத்தில் ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்களும், இரத்தினபுரி தேர்தல் மாவட்டத்தில் பத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும், கேகாலை தேர்தல் மாவட்டத்தில் ஒனபது நாடாளுமன்ற உறுப்பினர்களும் தெரிவு செய்யப்படவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# அரசியலில் ஏற்படும் குழப்பம் அபிவிருத்தியைப் பாதிக்கும்!

## ஆசிய அபிவிருத்திப் பணிப்பாளர் தெரிவிப்பு

இலங்கையின் அரசியலில் ஏற்படும் குழப்பங்கள் - அபிவிருத்தி நடவடிக்கைகளில் தேக்கநிலையை ஏற்படுத்தியுள்ளதென - ஆசிய அபிவிருத்தி வங்கியின் வதிவிடப் பிரதிநிதி ஜோன் கூனி தெரிவித்தார்.

வடமராட்சி பிரதேசங்களைச் சேர்ந்த 18 கடற்தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு, 3 கோடி ரூபாவைக் கையளித்து உரையாற்றும போது, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கையின் சமாதான நடவடிக்கையின் முன்னேற்றத்தைப் பொறுத்தே அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த வைபவத்தில் பொதுச்சுடரினை ஜோன் கூனியும், தேசியக் கொடியை தமிழீழ நிர்வாகசேவை யாழ்.மாவட்டப் பொறுப்பாளர் விஜிதரனும் ஏற்றிவைத்தனர்.

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

இரண்டாவது அகவையில்



பெயர் : க.கஜீபன்
முகவரி : வலதுகரை, முத்தையன் கட்டு.

ஐந்தாவது அகவையில்



பெயர் : ர.டெறிஷா
முகவரி : ஹெந்தள, வத்தளை.

**வாழ்க வளமுடன்**

சிறாரின் பெயர்:------------------

முகவரி :------------------

பிறந்த ஆண்டு ------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.



-------------
பெற்றோர் ஒப்பம்

# குமுதினிப்படகில் படுகொலை செய்யப்பட்டவர்களின் ஞாபகார்த்த வளாகப் பகுதியில் கடற்படையினர் உடற்பயிற்சி

நெடுந்தீவுப் பகுதியில் நிலைகொண்டுள்ள கடற்படையினர் - மாவலித்துறைமுகப் பகுதியிலுள்ள - குமுதினிப் படகில் படுகொலை செயயப்பட்டவர்கள் ஞாபகார்த்த வளாகப் பகுதியில் காலை வேளையில் உடற்பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

துறைமுகப் பகுதியில் குறிப்பிட்ட அளவு காணியில் நினைவுத் தூபியும், மண்டபமும் அமைக்கப்பட்டு நினைவுகூரப்படும் இடத்தில், ஏற்கனவே துறைமுகப் பகுதிப் பாதுகாப்பில் ஈடுபடுவதற்காக அங்கேயே சிறுமுகாம்போல தங்கியுள்ளனர்.

இதேவேளை, தற்போது அங்கே பயிற்சிகளிலும் ஈடுபட்டு வருவதனால், இந்தப் புனிதமான இடத்தை மேலும், மேலும் உதாசீனம் செய்வதாக மக்கள் கவலையும், விசனமும் தெரிவித்தனர்.

## மருத்துவ பீட மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

மருத்துவ பீட மாணவர்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் முன்னால் ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட்டனர். கொழும்பு பல்கலைக்கழக மருத்துவபட மாணவர்களே நேற்று இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனா். தற்போது நடைமுறையில் இருக்கும் பரீட்சை முறைக்கு எதிரதது இந்த மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

## பொதுத் தேர்தலில் போட்டியிட ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணி ஜனாதிபதியிடம் அனுமதி கோரல்

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி போட்டியிடுவதற்கான அங்கீகாரத்தை சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் யாழ். மாவட்டக் கிளை ஜனாதிபதியிடம் கோரியுள்ளது. இந்தவிடயம் குறித்து யாழ்.மாவட்ட சிறிலங்கா சுதந்திரக்கட்சி வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் -

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி - நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் யாழ்.மாவட்டத்தில் போட்டியிடுவது குறித்து, தொகுதி அமைபபாளர்களுடன் கலந்துரையாடப்பட்டது. தேர்தலில் போட்டியிடுவதா என்பது குறித்து பிரதம அமைப்பாளர் - மத்திய செயற்குழு உறுப்பினர்கள்மூலமாக சந்திரிகாவுக்கு அனுப்பி, அவரின் அனுமதியைப் பெறுவது எனத் தீர்மானிக்கப்பட்டது எனக் குறிப்பிடப்பட்டிருக்கிறது..

# நெடுந்தீவு அபிவிருத்திப் பணிகளின் அறிக்கை உள்ளூராட்சி உதவி ஆணையாளரிடம் கையளிப்பு

(நெடுந்தீவு)

நெடுந்தீவில் மேற்கொள்ளப்பட வேண்டிய உடனடி அபிவிருத்திப் பணிகள் தொடர்பான அறிக்கை ஒன்று - நெடுந்தீவு பிரதேச தேசிய எழுச்சிப்பேரவையினால் வடக்கு-கிழக்கு உள்ளூராட்சி ஆணையாளரிடம் கையளிக்கப்பட்டது. கடந்த 9 ஆம் திகதி நெடுந்தீவில் இடம்பெற்ற வைபவம் ஒன்றுக்கு வருகை தந்திருந்தபோதே, இந்த அறிக்கை நேரடியாகக் கையளிக்கப்பட்டது.

இந்த அறிக்கையில் - நவீன வசதிகளுடனான பயணிகள் படகு கொள்வனவு, நெடுந்தீவுக்கான மின் சாரவிஸ்தரிப்பு, விருந்தினா் விடுதி அமைததல், இடைநிறுத்தப்பட்ட ஆயுர்வேத வைத்தியசாலையை மீள அமைத்தல், குடிநீர் விநியோகத்தை விஸ்தரித்தல் (பிரதான நீர்த்தாங்கி அமைத்தல்), வீதிகள் முழுமையாகத் தாரிடல், இறங்குதுறை கலங்கரை விளக்கை புனரமைத்தல், வடக்குப் பகுதியில் கடலணை அமைத்தல், வீது அமைத்தல் போன்ற முக்கிய பணிகளே உள்ளடங்கியிருந்தது.

இதில் குடிநீர் விநியோகத்தை விஸ்தரிப்பதற்காகப் பிரதான நீர்த்தாங்கி அமைக்கும் பணிக்கென 30 இலட்சம் ரூபாவினை ஒதுக்குவதாக உடனடியாக உறுதியளித்துச் சென்றதுடன், ஏனைய வேலைகளுக்கான மதிப்பீட்டறிக்கைகளை உடன் தயாரித்து அனுப்புமாறு - நெடுந்தீவு பிரதேசசபையினருக்குப் பணித்துச் சென்றமையும் குறிப்பிடத்தக்கது. (113)

# தேர்தல் வன்முறை ஆரம்பம்

(கொழும்பு)

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு, பொதுத்தேர்தலுக்கான அழைப்பு விடுக்கப்பட்டநிலையில், தோதல் வன்முறைகள் ஆரம்பமாகியிருப்பதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

மினுவாங்கொடையிலுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதேச வேட்பாளர் ஒருவரின் வீடு - இனந்தெரியாத ஆயுததாரிகள் இருவரால் தாக்கப்பட்டது. ஆயுததாரிகள் வீட்டின்மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டபோதும், எவருக்கும் காயம் ஏற்படவில்லையென மினுவாங்கொட பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்

## விவசாயக் குழுக்கூட்டம்

கரவெட்டி பிரதேசசெயலகத்தின் கேட்போர்கூடத்தில் இன்று பி.ப. 2 மணிக்கு விவசாயக்குழுக் கூட்டம் நடைபெறவுள்ளது.

விவசாயத்தோடு தொடர்புடைய அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் தலைவர்களையும், கமக்கார அமைபபுக்களின் பிரதிநிதிகளையும் தவறாது கலந்துகொள்ளுமாறு பிரதேச செயலர் க.கனகரத்தினம் தெரிவித்தார். (116)

## தண்ணீர் தாங்கி திறப்புவிழா

சமரபாகு நியூட்டன் விளையாடரங்கில் - தண்ணீர் தாங்கி திறப்புவிழா கடந்த ஞாயிற்றுக் கிழமை நியூட்டன் சனசமூகநிலைய தலைவர் வ.முருகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது.

இந்தவிழாவில் பிரதம விருந்தினர்களாக முன்னாள் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி, யு.என்.எச.சி.ஆர் தலைமை அதிகாரி கே.சுகிமுறாட்டா ஆகியோர் கலந்துகொண்டனர்.(116)

## ஆண்டுவிழாவும் பரிசளிப்பு விழாவும்

தெல்லிப்பளை துர்க்காபுரம் மகளிர் இல்லத்தின் 22 ஆவது ஆண்டு நிறைவு விழாவும், பரிசளிப்பு விழாவும் - எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு, துர்க்காதேவி அன்னபூரணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக இந்து சமய கலாசார அலுவல்கள் அமைச்சின் சிரேஷ்ட உதவிப்பணிப்பாளர் து.வைத்திலிங்கமும், சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட பதில் நீதிவான் மு.திருநாவுக்கரசும் கலந்துகொள்வர்.

## யாழ்.நகரில் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதியில் அநாதரவாகக் காணப்பட்ட சடலம் ஒன்றைப் பொலிஸார் மீட்டெடுத்து, நேற்றுமுன்தினம் மாலை யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

இந்தச் சடலம் புங்குடுதீவு 12 ஆம் வட்டாரத்தைசேர்ந்த நா. ரவீந்திரகுமார் (வயது 45) என இனங்காணப்பட்டது. மரணமடைந்தவர் ஒரு பழக்கடை வியாபாரி ஆவார். இவரது சடலம் வைத்திய பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.




# வேலையில்லை என்பது வீணான பிரமை

படித்துவிட்டு வேலையில்லாமல் இருப்பவர்கள் தொகை - நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமுள்ளது. வேலையில்லாப் பட்டதாரிகள் அதிகமாகவுள்ள இடமாக யாழ்ப்பாணக் குடாநாடு உள்ளதாக புள்ளி விபரங்கள் தெரிவித்துள்ளன. இந்தச் சூழலில் சுயதொழில் முயற்சிகளில் ஈடுபடலாம் என்ற எண்ணம் வலுப்பெறுகிறது. இந்தநிலையில், சுயதொழில் முயற்சியில் ஈடுபட்டுள்ள மல்லாகத்தைச்சேர்ந்த தவநாதன் றொபேட் மதிசேகரம் எனும் இளைஞரை யாழ்ப்பாணம் வணிகர் கழக அலுவல்கத்தில் சந்தித்தோம்.

இவரால் உற்பத்தி செய்யப்பட்ட "பேர்வலைட்" எனும் சலவைத்தூள் பற்றிய அறிமுக வைபவத்திற்காக வந்திருந்த இவரிடம் பேச்சுத் தொடுத்தோம்.

**தங்களைப் பற்றி என்ன சொல்ல விரும்புகிறீர்கள் என்றபோது -**

எனது பெயர் மதிசேகரம், நான் யாழ். பல்கலைக்கழகத்தினுடைய ஒரு கலைப் பட்டதாரி. மல்லாகத்தைச் சேர்ந்தவன். பல்கலைக்கழகக் கல்வியை முடித்தவுடன், ஒரு பிரபலமான விமானக் கம்பனியிலே வதிவிட முகாமையாளராகக் கடமையாற்றினேன். தற்போது சுயதொழில் உற்பத்தித்துறையில் ஆரவத்துடன் செயற்பட்டுவருகிறேன் எனக் கூறியவரிடம் -

**விமானசேவைக் கம்பனியொன்றில் நிறைந்த சம்பளத்துடன் வேலைசெய்த போதும், ஏன் தங்களுக்கு உற்பத்தித் துறையில் நாட்டம் வந்தது.**

நான் வேலை செய்த கம்பனிக்கு தென்னிலங்கையைச் சேர்ந்த மிகப்பெரிய வர்த்தகர்கள், உற்பத்தியாளர்கள் எனப் பலரும் வருவார்கள். அவர்களுடன் உரையாடியபோது, தமிழனுக்கு உற்பத்தி தொடர்பான ஆற்றலோ, அறிவோ இல்லையென கணிப்பிட்டுள்ளமையை அறியக் கூடியதாகவிருந்தது. இந்தக் கருத்தே எனது மனத்திலே ஒரு தாக்கத்தையும், தூண்டுதலையும் ஏற்படுத்தியது. எங்களாலும் முடியும். செய்து காட்டுகிறோம் எனத் துணிந்தே அந்த வேலையை விட்டு இதற்குள் இறங்கினேன். அதை விட இயற்கையாகவே சிறுவயதிலிருந்தே எனக்கு ஏதாவதை கண்டுபிடிக்கவேண்டுமெனும் ஆர்வம் இருந்தமையும், இந்தத் துறைக்கு நான் வருவதற்கு ஒரு காரணமாகவிருந்தது என கூறியபடி சற்று உற்சாகமானார்.

**இதனை சவாலாக ஏற்றுக்கொண்டதாங்கள் இதில் வெற்றியடைந்துள்ளீர்களா எனக் கேட்டபோது,**

நான் நினைத்ததை நான் செய்துவிட்டேன். ஆனால், எனக்குச் செய்யவேண்டியதை உரியவர்கள் செய்யவில்லை. அதாவது பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் அவர்கள் இருக்கின்ற கதிரைக்கு என ஒரு கடமை இருக்கிறது அந்த கடமையை மட்டும் சரியாகச் செய்தாலே நாம் கட்டாயமாக முன்னேறலாம் அதைச்செய்ய அவர்கள் தவறிவிடுகிறார்கள் என தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியவரிடம் -

**தங்கள் உற்பத்திக்கு வேண்டிய மூலப் பொருட்களை எவ்வாறு பெற்றுக்கொள்கிறீர்கள் என்றபோது -**

உற்பத்தித்துறைக்கான மூலப்பொருட்கள் நிறைந்து காணப்படுகிறது. அதனைப் பயன்படுத்தி, உற்பத்தித்துறையை முன்னேற்ற வேண்டும். நானும் தற்போது கொழும்பிலிருந்துதான் மூலப்பொருட்களை வருவிக்கின்றேன். ஆனால், இங்கேயுள்ள சுண்ணாம்பு, சிலிக்கேற்று, உப்பு என்பவற்றை பயன்படுத்தவேண்டுமென்பதே எனது விருப்பம். ஆனால், இவற்றை உரிய முறையிலே பிரித்தெடுப்பதற்கு வேண்டிய வசதிகளைச் செய்ய அதிகளவான முதலீடு தேவைப்படும் என்றபோது -

தற்போதைய சூழ்நிலையில் சாதாரண தும்புத்தடிகூட கொழும்பிலிருந்துதான் வருகிறது. இங்கு உற்பத்தி நிலமை பூச்சியமாகவே உள்ளது. காலப்போக்கிலே இந்த நிலை மாறவேண்டும். அதற்கான முயற்சியில் அனைவரும் ஈடுபடவேண்டும். எமது மண்ணிலேயே

**தொழிலுக்கான முதலீட்டை எவ்வாறு பெற்றுக்கொண்டீர்கள் என வினாவினோம்.**

எனது சொந்த முதலீட்டிலேதான் தற்போது தொழிலை ஆரம்பித்துள்ளேன். ஆனால், கடன்கள் பெறுவதற்காக அநேகமான வங்கிகளை தேடிச்சென்றேன். எதுவித பலனும் கிட்டவில்லை. இந்த இடத்தில் முக்கியமான ஒரு விடயத்தை குறிப்பிடவிரும்புகிறேன். குடாநாட்டுப் பத்திரிகை ஒன்றிலே வங்கியொன்றின் விளம்பரமொன்று அடிக்கடிவருகிறது. அந்த வங்கியையும் நாடிச்சென்று கடனுதவிகேட்டேன். அவர்கள் வாடிக்கையாளர்களுக்கு மட்டும்தான் கடன் வழங்குவர்களாம் அதைவிட வேறு சில நிபந்தனைகளும் போட்டார்கள். அவர்கள் வங்கிக்குரிய நடைமுறையில் கதைப்பதாக எனக்குத் தெரியவில்லை.

தென்னிலங்கையிலுள்ள அதே வங்கிகள் தான் இங்குமுள்ளன. ஆனால், தென்னிலங்கையில் செய்கின்றளவு ஊக்குவிப்பை இங்கு செய்யவில்லை. விளம்பரத்தை மட்டும் செய்கிறார்கள். என குறைப்பட்டுக் கொண்டவரிடம் -



**படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கும் இளைஞர்களின் தொகை தற்போது அதிகரித்து வருகிறது. அந்த இளைஞர்களுக்கு தாங்கள் என்ன கூற விரும்புகிறீர்கள் எனக் கேட்டபோது -**

வேலையில்லை என்பது நாமாக ஏற்படுத்திக்கொண்ட ஒரு பிரமை. வேலையில்லை என்று சொல்லிவிட்டு, பேசாமலிருப்பது மடமைததனம். எத்தனையோ உற்பத்தித் துறைகள் இருக்கின்றன. அதற்கான வழிமுறைகளும் உள்ளன. அவற்றைத் தேடிக் கண்டுபிடித்து முன்னேறவேண்டும். அதற்குத்தான் படிக்கிறதேயன்றி வேலையை கொண்டு வருவதற்கு படிப்பதில்லை. வேலையைத்தேடி நாங்கள் தான் போகவேண்டுமே தவிர, வேலை எங்களைத் தேடிவராது எனச்சற்று நிதானித்தவரிடம் -

**இந்தத் துறையிலே தாங்கள் கடந்து வந்த இடர்பாடுகள் தொடர்பாக என்ன சொல்ல விரும்புகிறீர்கள் எனக் கேட்டோம் -**

நிறைய இடர்பாடுகளைச் சந்தித்தேன். முக்கியமாக இங்கு எமக்கென ஒரு இரசாயன பகுப்பாய்வு நிலையமில்லை எந்த ஒரு சிறு பகுப்பாய்விற்கும் கொழும்பிற்குத்தான் செல்ல வேண்டியுள்ளது. நான் ஆறுமாதத்தில், இருபத்தாறு தடவைகள் கொழும்புக்குச் சென்றேன். இரசாயனப்பகுப்பாய்விற்காக.

யாழ்.பல்கலைக்கழகத்தினர் எனக்கு இரசாயன பகுப்பாய்விற்கு அனுமதியளித்துள்ளனர். ஆனால், அவர்கள் பூரணமாக எனக்கு ஒத்துழைப்பு நல்கும் மனநிலையில் இல்லை. தங்களுக்கு அப்படியொரு கடமை உள்ளதா என்பது அவர்களுக்கே சந்தேகமாகவுள்ளது எனக் கவலையுடன் தெரிவித்தார்.

சர்வதேசத்தரமெனும் மாயத்தோற்றமொன்றை வெளிநாட்டு நிறுவனங்கள் இங்கு தோற்றுவித்திருக்கிறது. அதற்கு எதிராக விளம்பரம் செய்யக்கூடிய வலு எம்மிடமில்லை. ஏனெனில் இன்று தொலைக்காட்சி தான் அநேக மக்களைக் கட்டிப்போட்டுள்ள. ஊடகம்.

இங்குள்ள தெலைக்காட்சி நிறுவனங்களும் ஒரு செக்கனுக்கு விளம்பரம் செய்ய நாற்பதினாயிரம் ரூபா கேட்கிறார்கள். ஒரு இலட்சம் ரூபா முதலீட்டோடு தொழில் செய்யும் எமக்கு அது முடியாதகாரியம்.

சர்வதேசதரம் என்பதை எமது மக்கள் தவறாகப் புரிந்துள்ளார்கள். இந்தக் கருத்தை மக்கள் உணர்ந்து கொள்ளீவேண்டும். எனும் மிகப் பெரிய எதிர்பார்ப்புடன் தனது செவ்வியை நிறைவுசெய்து கொண்டார்.

**நேர்காணல்:-**
**சர்வேஸ், தீபன்**

## பேர்வலைட் பற்றி சில வரிகள்




இது எமது குடாநாட்டு நீருக்கென ஆய்வு செய்யப்பட்டு உருவாக்கப்பட்ட சலவைத்தூளாகும். எட்டு வருட ஆய்வின் முடிவாக யாழ்.பல்கலைக்கழக இரசாயனவியற்துறையால் அங்கீகரிக்கப்பட்டதாக இந்தச் சலவைத்தூள் சந்தைக்கு வந்துள்ளது.

ஏனைய வெளிநிறுவன உற்பத்திகளைவிட, இது தரமானதாகவுள்ளதாக ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன. மிருகக்கொழுப்பு அற்றுத்தயாரிக்கப்பட்டுள்ள இந்தச் சலவைத்தூள், எமது கைகளுக்கும் எதுவிதத் தீங்கையும் ஏற்படுத்தாது. ஆனால், ஏனைய சலவைத்தூள்கள் சலவை இயந்திரத்திற்கென விசேடமாக தயாரிக்கப்பட்டமையால், அவற்றுள் கையை வைக்கும்போது பாரிய பின்விளைவுகளை எதிர்கொள்ளவேண்டியுள்ளது.

பொலுத்தீன் பாவனை தடைசெய்யப்பட்டுள்ள நிலையில், இதன் மேலுறையானது கடதாசியினால் ஆக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். தேசிக்காய்ச்சாறு இதனுள் நேரடியாகச் சேர்க்கப்பட்டுள்ளமையால், அழுக்கை இலகுவாக அகற்றுவதோடு, ஆடைகளை நீண்ட காலத்திற்குப் பழுதடையாமலும் வைத்துள்ளது. ஆனால், மற்றைய பவுடர்கள் ஆடைகளிலுள்ள சிறு துவாரங்களை அடைத்துவிடுவதுடன், ஆடையை விரைவாக பழுதடையச் செய்கின்றன. இதனால் உடல் ஆரோக்கியம் பாதிப்படைவதுடன் உங்களுக்குச் செலவும் ஏற்படுகிறது.

இவற்றையெல்லாம் கவனத்தில் கொண்டே பேர்வலைட் சலவைத்தூள் தயாரிக்கப்பட்டுள்ளமை சிறப்பான வரவேற்கத்தக்க விடயமாகும்.

# வாரம் ஒரு சிறுதொழில்

## பற்பொடி செய்யும் முறை

பற்பொடி தயாரிக்க முற்படும்போது - முக்கியமாகக் கவனிக்கவேண்டியது - விலை மிகவும் மலிவாகவும், அதே சமயம் தரமானதாகவுமுள்ள பற்பொடிவகைகளையே தயாரிக்கவேண்டும் என்பது தான்.

பற்பொடியைப் பலவண்ணங்களில் அழகாக அச்சிட்ட பக்கட்டுக்களில் பொதிசெய்து, விற்பனைக்கு அனுப்புவது இந்தநாளில் ஒருமுக்கியமானவிடயம். பக்கற்றுக்களையும், விளம்பரத்தையும் நம்பி ஏமாறுகின்ற இன்றைய உலகத்தில் எளிமைக்கு மதிப்பில்லை என்பதனால்தான் ஓரளவு கவற்சியான பொதிகளில் அடைத்தல் முக்கியமாகவுள்ளது. இதற்காகச் செய்யப்படும் செலவு வீணானதல்ல-

தேவையான பொருட்களில் உமியை வாங்கி ஓரிடத்தில் குமித்துத் தீமூட்டிவிடவேண்டும். உமி உள்ளுக்குள்ளேயே கனன்று எரியும், இது வெளியே தெரியாது. ஒரு நாள்முழுவதும் அப்படியே விட்டு விட்டால் உமிமுற்றிலுமாக எரிந்து, சாம்பலாகிவிடும். சாம்பலை மூடிக் கரி காணப்படும். கரியை மெதுவாகத் திரட்டி அகற்றிவிட்டால், வெண்மையான சாம்பல் வரும் - அந்தச் சாம்பலைத் தனியாக எடுத்து, அரித்து வைத்துக் கொள்ளவேண்டும். இந்தச் சாம்பலுடன் இரண்டு லீற்றர் கராம்புத்தைலம், சர்கரின் என்ற இனிப்புப் பொடி 2-3 கிராம், மஜந்தா என்ற சிவப்பு வண்ணச்சாயம் 5 - கிராம் ஆகியவற்றைச் சேர்த்துக்கொள்ளவேண்டும்.

முதலில் சாயப் பவுடரை சிறிதளவுதண்ணீர்விட்டு கலக்கிக் கொள்ளவேண்டும். ஒரு வாயகன்ற பாத்திரத்தில் உமிச்சாம்பலைப் போட்டு, கொஞ்சம் கொஞ்சமாக சாயப்பவுடர் கலக்கப்பட்ட நீரை சாம்பலில் ஊற்றி, மெதுவாகப் பிசைய வேண்டும்.

சாம்பலின் வெண்மைநிறம்மாறி, நல்ல மஜந்தா நிறம் வரும்வரையில் பிசையவேண்டும். பின்னர் சாம்பலைக் சற்று நிழல்ற்பாங்கான இடத்தில் நன்றாகக் காயவிடவேண்டும். காற்றினால் தூசுகள் விழுந்து விடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும், தூசு விழுந்துவிட்டால் பற்பொடியின் தரம் கெட்டுவிடும், உபயோகிக்கும்போது - மண், தூசு என்பன பற்களுக்கு ஊறுவிளைவிக்கும்.

காய்ந்த பற்பொடியில் கட்டி, உருண்டை ஏதுமில்லாதவாறு உடைத்து ஒழுங்காக வைத்துக் கொள்ளவேண்டும். கராம்புத் தைலத்தையும் பெப்பமென்ற் உப்பையும் சாம்பலுடன் சிறிது சிறிதாகப் போட்டுக் கலந்து கொள்ளவேண்டும். இப்போது பற்பொடி தயார் இனி அதை நல்ல அழகிய பக்கெற்றுக்களில் பொதிசெய்து, விலையை நிர்ணயித்து, வேண்டுமாயின் தகரரின்களிலும் அடைத்து - மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்கு அனுப்பலாம். சிறு கைத்தொழில்களிலும் சிறிதளவு முதலீட்டில் செய்யப்படும் ஒரு எளிமையான கைத்தொழில் இது. நீங்களும் முயன்று பாருங்கள் முயற்சி திருவினையாக்கும்.

# நிறுவனத்தின் வளர்ச்சியில் உற்பத்தித்திறன் பற்றிய ஓர் நோக்கு

## உற்பத்தித்திறன்

இன்றைய உலக மயமாக்கல் செயற்பாடுகளுடன், ஒப்பிடும்போது, உற்பத்தித்திறன் இன்றியமையாத ஒன்றாகக் காணப்படுகின்றது.

ஒரு நிறுவனத்தின் வளர்ச்சிக்கும், வெற்றிக்கும் உற்பத்தித்திறன் கணிசமான பங்கை வகிக்கிறது. உலகில் முதன்முதலில் 17 ஆம் நூற்றாண்டுக் காலப்பகுதியில் விஞ்ஞானரீதியாக பொருளியற்கருத்துக்களை பிசியேகிரட் (Physiocrat) கருத்து முன்வைத்தார். இவருக்குப் பின்னர் வந்த பிரக்டிக் ரெயிலர் உற்பத்தித்திறன் பற்றிய கருத்துக்களை விரிவாக்கினார். இவர் உற்பத்தியாளர்களையும், தொழிலாளர்களையும் வினைத்திறனுடன் செயற்பாட்டை மேற்கொள்ளும்போது, மிகையான உற்பத்தியைப் பெறமுடியும் என்பதாகும்.

இன்று உற்பத்தித்திறன் பற்றிய கொள்கையில் ஜப்பான் முனைப்புடன் செயற்பட்டு, வெற்றியீட்டியுள்ளது. இதற்குக்காரணம் புதிய முகாமைத்துவக்கொள்கைகள், திறன் உத்திகளைப் பயன்படுத்துவதன்மூலம் உற்பத்தித்திறன் அதிகரித்தது. ஜப்பான் உற்பத்தித்திறன்கொள்கைகளை ஏனைய மேற்கு ஐரோப்பா நாடுகளும், அமெரிக்காவும், ஏனைய சில குறைவிருத்தி நாடுகளும் பின்பற்றிவருகின்றன.

உற்பத்தித்திறனானது, உற்பத்திப் பௌதீக வளத்துடன், மனித வளத்தையும் இணைக்கும் ஒரு கருத்தாகும். இவற்றில் மனிதவளம் என்பது முக்கிய இடம் வகிக்கின்றது. ஏனெனில், வேலையில் ஈடுபடுத்தும் பணியாளர்களின் மனோநிலை, கல்வி, அறிவு, தொழிற்திறன், தொழிலில்விருப்பம், உடல் வலு, மனிதமூளை விருத்தியும், சிந்தனையும் வேறுபட்டதாகக் காணப்படும்.

இதனால், இவற்றின் தகுதிநிலைகளை அறிந்து, அதற்கேற்ப உற்பத்தித்திறன்களைப் பயன்படுத்தும்போது, உற்பத்தியை சிறந்த முறையில் மேற்கொண்டு உற்பத்தியை அதிகரிக்கமுடியும்.

உற்பத்தித்திறன் = வெளியீடு / உள்ளீடு

உற்பத்தித்திறனானது, மொத்த வெளியீட்டினை, உள்ளீட்டினால் வகுப்பதன்மூலம் பெற்றுக்கொள்ளுவதாகும். இந்த உற்பத்தித்திறன் அதிகரிப்புக்கு உற்பத்தித்திறன் உத்திகள் காரணமாகும்.

### உற்பத்தித்திறன் உத்திகள்

உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்குப் பயன்படுத்தப்படும் ஒரு சாதனமாக அல்லது கருவியாக இது அமைகின்றது. இதனை மேற்கொள்ள பின்வரும் முறைகள் பயன்படுத்தப்படும்.

⇊ **Japanese 5 S** (ஜப்பானிய ஐவீதி)
⇊ **KIZEN** (கைசன்) படிப்படியான சிறு முன்னேற்றம்.
⇊ **Innovation** - புதுமையைப் புகுத்துதல்.
⇊ **Quality Circle** - தரச்சுற்று அல்லது தர வட்டம்.
⇊ **Just I Time** - உரிய நேரத் தந்திரோபாயம்.
⇊ **Total Quality Management** - மொத்தத்தரக் கட்டுப்பாட்டு முகாமை.
⇊ **Innovation** - புதுமையைப் புகுத்துதல்.

### (01) Japanese 5 S (ஜப்பானிய ஐவீதி)

உற்பத்தி நிறுவனங்கள், பணிமனைகள், அலுவலகங்கள் போன்றவற்றில் சிறந்த கட்டுக்கோப்புடன் நிர்வகிப்பதற்குப் பயன்படுத்தப்படும் ஒரு முகாமைக் கருவியாகும். இந்தச் சொற்கள் ஜப்பானிய ஐந்து சொற்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு சக்தியாகக் காணப்படுகின்றது. அவை பின்வருமாறு -

1. செய்ரீ - தேவையற்றவற்றை நீக்குதல்.
2. செய்ரோன் - ஒரு பொருளை, ஒரு இடத்தில் வைத்துப் பாவித்தல்.
3. செய்சோ - துப்புரவாக்குதல்.
4. செய்செற்சு - தரப்படுத்திவைத்தல்.
5. செய்சுகி - பயிற்சி.

**01. SEIRI - Cleaning up**
**செய்ரீ - தேவையற்றவற்றை நீக்குதல்**

தொழில் நிறுவனம், அலுவலகங்கள் போன்ற இடங்களில் தேவையற்ற செயற்பாடுகளை நீக்கிக்கொள்ளுதல் ஆகும்.

அத்துடன், பொருட்களை ஒழுங்கில் வைத்திருப்பதைத் தீர்மானித்தல், பாரம்பரிய தேவையற்ற பொருட்களை சேகரித்து வைக்கும் முறையைக் குறைத்தல் போன்ற செயல் முறையாகும்.

**02. SEITON - A PLACE FOR EVERY THINGS**
**செய்ரோன் - ஒரு பொருளை, ஒரு இடத்தில் வைத்துப் பாவித்தல்**

தொழில் நிறுவனங்களில் பயன்படுத்தும் பொருட்களை உரிய இடத்தில் வைத்து பயன்படுத்தும் முறையாகும். அதாவது, பதிவுப் புத்தகம் - ஆவணக் கோவைகள் திறப்புக்கள், உபகரணம், காகிதாதிப் பொருட்கள் போன்றவற்றினை ஒழுங்காக வைத்துக் கொள்ளுதலைக் குறிக்கும்.

**03. SEISO**
**செய்சோ - துப்புரவாக்குதல்**

நிறுவனத்தின் அகச்சூழல்களையும், புறச்சூழல்களையும் துப்புரவாகவைத்திருத்தலைக் குறிக்கும். இங்கு கழிவுப்பொருட்களை உரிய இடத்தில் போடுதல், கூட்டுதல் தூசிகளைத் துடைத்தல் போன்ற செயல்முறைகளை மேற்கொள்வதைக் குறிக்கும்.

**04. SEIKETSO - STANDAEDIZATION**
**செய்செற்சு - தரப்படுத்திவைத்தல்**

ஒரு உற்பத்திப் பொருளின் தர நிர்ணயத்திற்கு அமைய உற்பத்தி இடம் பெறுகின்றது என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளுவது ஆகும். இன்றைய போட்டி உலகில் தரம் என்பது ஒரு முக்கிய பணியாகக் காணப்படுகின்றது. எனவே, உற்பத்திப் பொருட்கள் தர நிர்ணயத்திற்கு அமைவாக மேற்கொள்ளுவதை இது குறிக்கும்.

**05. SHITSUKE - TRAINING**
**செய்சுகி - பயிற்சி**

மேலே குறிப்பிட்ட **SEIEI, SEITION, SEISO, SETKETSO** ஆகிய 4 முறைகள் பற்றிய பயிற்சி மேற்கொள்ளும் முறையாகும். அவை தொடர்ந்து இடம்பெறுதல் என்பதை உறுதிப்படுத்தவும் இது துணைபுரிவதாக அமைகிறது.

எனவே ஜப்பானிய 5 சொற்கள்மூலம், அமைந்த ஜப்பானிய ஐவிதக்கோட்பாட்டின் மூலம், உற்பத்தித் திறனை அதிகரித்துக் கொள்ளமுடியும்.

### (02) KIZE (கைசன்) படிப்படியான சிறு முன்னேற்றம்

உற்பத்திச் செயல்முறையில் சிறுசிறு முன்னேற்றங்கள் ஏற்படுத்திக் கொள்ளுவதை **KIZEN** எனலாம். பொதுவாக பாரம்பரிய நடைமுறைகளில் செயற்படும்போது, அதில் சிறுசிறுமாற்றமடைய வேண்டியிருக்கும். இந்தச் செயற்பாட்டை மேற்கொள்ளும்போது, ஒவ்வொரு முகாமையாளர்களும் சிறந்த முறையில் மேற்கொள்ளுவதன்மூலம், இந்த உத்தியில் வெற்றி கொள்ளமுடியும். இதற்கு எல்லாத் தொழில் புரிவோரின் பங்களிப்பும் அவசியம். சிறிய சிறிய முன்னேற்றங்கள் ஒரு நிறுவனத்தின் பாரிய வெற்றிக்கு வழிவகுக்கும். இது எப்பொழுதும் நிகழ வேண்டும். அத்துடன், இதில் சகல துறைசார்ந்த பங்களிப்பும் இன்றியமையாததாக அமையும்.

### (03) INNOBATION புதுமையைப் புகுத்தல்

உற்பத்தித் துறையில் பாரிய முன்னேற்றம் ஏற்படுத்திக் கொள்ளுதல் ஆகும். இது **KIZEN** இற்கு மாறுபட்டதாக அமையும். பாரிய மாற்றத்தை ஏற்படுத்த பலர் தயங்குவார்கள். அதாவது ஒரு பாரிய தொழிலை மேற்கொள்ளுவதற்கும் பல்வேறு சவால்களை எதிர்கொள்ளவேண்டும். இவற்றுடன் இணைந்த வகையில், பாரிய முதலீடுகள் தேவைப்படுவதுடன், செலவுகளும் உயர்வாக அமையும். இதனால், பாரிய மாற்றங்களை மேற்கொள்ள சிலர் தயங்குவார்கள்.

எனவே,இந்த உத்தியில் வெற்றிகொள்ள வேண்டுமாயின் போட்டிகளையும், சவால்களையும் எதிர்கொள்ளக்கூடிய சக்தி இருத்தல் அவசியம். (தொடரும்...)

# பணம் சம்பாதிப்பது சிரமமான விடயமா?

பல வழிகளில் பணம் சம்பாதிக்க முடியும் என்ற உண்மை, அநேகமாக எல்லோருக்குமே தெரியும். பணம் சம்பாதிப்பவர்களுக்கு மட்டுமல்ல - சம்பாதிக்க ஆசைப்படுபவர்களுக்குக் கூட இந்த உண்மை விளங்கும். பணம் சம்பாதிக்க வகை தெரியாது, வழிதெரியாது, வெற்றுவாழ்க்கை நடத்துபவர்கள்கூட இந்த உண்மையை அறிவார்கள்.

அப்படியானால் எல்லோருமே ஏன் போதுமான அளவு பணம் சம்பாதிப்பதில்லை அல்லது சம்பாதிக்க முடிவதில்லை. இதற்கு இரண்டு காரணங்கள்தான் கூறமுடியும். ஒன்று பலருக்குப் பணம் சம்பாதிக்கும் வழி தெரிவதில்லை, ஒரு சிலருக்குத் தெரிந்தாலும், விடாமுயற்சியுடன் கடுமையான உழைப்பின் அடிப்படையில், அந்த வழிகளில் அடியெடுத்து வைத்து முன்னேற பலருக்கு தன்னம்பிக்கை , சக்தி , ஆற்றல் அல்லது திறமை இருப்பதில்லை.

மேற்சொன்ன குறைபாடு இல்லாத யாருமே சிறுகச் சிறுகப் பணம் சேர்த்து, சொந்த வாழ்க்கையில் மிக உயர்ந்த உன்னதமான நிலையை எட்டிப்பிடிக்கலாம்.

பணம் சம்பாதிப்பதற்கான திட்டவட்டமான வழிமுறைகளை முதலில் தெளிவாக விளங்கிக் கொள்ளவேண்டும். அந்தவழிகளில் பிரவேசிப்பதற்கான ஒரு குறைந்த பட்ச சாதனத்தை தயார் செய்து கொள்ளும் சக்தியைத் தேடிக்கொள்ளவேண்டும்.

பணம் சம்பாதிப்பதற்கான தீவிர முயற்சிகளில் ஈடுபடும் மன ஆற்றலை பெருக்க வேண்டும்.

எவ்வளவு சரியான முயற்சியாக இருந்தாலும், எடுத்த எடுப்பிலேயே வெற்றிகிடைத்து விடும் என்று எதிர்பார்க்க முடியாது. பல தோல்விகளைச் சந்திக்கத்தான் வேண்டியிருக்கும் தோல்விகளைக் கண்டு துவளாமல், துடிப்பாகத் துணிச்சலாக தீவிரமாக முன்னேறும் ஆளுமை ஒவ்வொருவரிடமும் அமையவேண்டும்.

பணம் சம்பாதிப்பதற்கு மிகவும் முக்கியமான அடிப்படையாகத் தேவைப்படுவது. கடுமையான உழைப்பு ஆகும், வேறு என்ன தகுதியும் நல்ல வாய்ப்புக்களும் நம்மிடம் இருந்தாலும், கடின உழைப்பு என்ற ஜீவிதமான அம்சம் நம்மிடம் இல்லையென்றால் நிச்சயமாக நம்மால் ஓரளவுக்குக்கூட பணம் சம்பாதிக்க முடியாது.

அந்த அடிப்படை உண்மை எப்போதுமே மனத்தைவிட்டு அகலக்கூடாது.

'வல்லவனுக்கு புல்லும் ஆயுதம்' என்ற ஒரு பழமொழியுமுண்டு சரியான தகுதியும், திறமையும் உள்ள ஒருவன் பெரிய மூலதனம் போன்ற பிரச்சினைகளைப் பற்றிக் கவலைப்படாமல், தன் அறிவாற்றலை மட்டுமே மூலதனமாகக் கொண்டு, தனக்கென ஒரு வேலை அல்லது தொழிலைத் தானாகவே ஏற்படுத்திக்கொண்டு பணம் சம்பாதித்து வாழமுடியும் என்ற ஒரு வாழ்க்கை இரகசியத்தை 'வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்' என்ற பழமொழி புலப்படுத்துகின்றது.

அறிவாற்றலை அடிப்படையாகக் கொண்டு, அதையே மூலதனமாகக் கருதி சந்தர்ப்ப சூழ்நிலைகளைப் பயன்படுத்தி, நல்ல வருமானத்தையும், உழைப்பையும் இன்பவாழ்க்கையையும் பெற்றுக் கொள்ளமுடியும்.

**- ஓர் அறிஞன்.**

# பிரச்சினைகளை அணுகும் விதம்

நம் நினைவேடுகளை மெல்லப்புரட்டிப் பார்த்தால் நமக்கே வியப்பாக இருக்கும். எத்தனையெத்தனை துன்பங்களைச் சந்தித்தவாறு! எப்படியெல்லாம் அவற்றை வெற்றி கொண்டிருக்கிறோம், அல்லது சமாளித்திருக்கிறோம்.!

குறைந்த பட்சம் அவற்றால் தாக்குண்டு நமக்குப் பழகிப்போய்விட்டதும் உண்டு.

நாம் சந்திக்காத தர்மசங்கடங்கள் அல்லது சோகங்கள் இந்த உலகத்தில் இனி என்ன இருக்கமுடியும்?

அனைத்துக்கும் பழகிப் போய்விட்ட நாம், ஏனோ இன்று ஒரு பிரச்சினை வந்துவிட்டது என்பதற்காக பிஸ்கெட் பறிக்கப்பட்ட பிள்ளையைப்போல் முகத்தை வைத்துக் கொள்கிறோம்.

ஒரு நூறு ரூபா நோட்டைத் தொலைத்துவிட்டால்கூட இதயத்தில் இமயத்தையே தூக்கி வைத்துக்கொண்டு சுமப்பதைப்போல் சிரமப்படுகிறோம்.

தினம் தினம் ஒவ்வொருவருககும் விதவிதமான பிரச்சினைகள். ஆனால், இதேபோன்ற பிரச்சனைகளை நாம் சந்தித்தவர்கள்தான். அதன்படி இந்த நேரம் நம் மனம் அடிபட்டு அடிபட்டுக் கன்றிப் போயிருக்க வேண்டுமல்லவா? மரத்துப் போயிருக்க வேண்டுமல்லவா?

பலர் விடயத்தில் இந்த அணுகுமுறை அறவே இல்லை. அன்றாடப் பிரச்சினைகளை ஏதோ முற்றிலும் புதிய ஒன்றை அணுகுவதைப்போல் அணுகுகிறார்கள்.

16 ஆம் வாய்ப்பாடு நன்கு தெரிந்த ஒரு குழந்தையிடம் 16x16 எவ்வளவு என்ன என்று கேட்டால், உடனே விடையைச் சொல்லாமல், 'பதினாறொன்று பதினாறு, பதினாறிரண்டு முப்பத்திரண்டு என்று ஆரம்பிப்பதைப் போன்றது இது.

நாம் சந்தித்த எவ்வளவோ பிரச்சினைகளை இன்றும் நம் நண்பர்களிடமும், உறவினர்களிடமும் வேடிக்கையாகச் சொல்லி மகிழ்வதில்லையா? அவற்றையே நகைச்சுவையாக ஆக்கி இன்று சிரிப்பதில்லையா?

அந்த மனநிலையில் ஒரு 50 சதவிகிதத்தை அந்தப் பிரச்சினையை அணுகும்போதே ஏற்படுத்திக் கொண்டால், எவ்வளவு நன்றாக இருக்கும்?

கொஞ்சம் எளிமைப்படுத்திச் சொல்வது என்றால், ஒரு பிரச்சினை வந்ததுமே, அதை பத்து நாள் கழித்து எப்படி எடுத்துக்கொள்வோம் ஒரு வருடம் கழித்து அந்தப் பிரச்சினையைப் பற்றி என்ன நினைப்போம்? என்கின்ற கண்ணோட்டத்தில் சிந்தித்தால், பிரச்சினை என்பது நமக்கு ஒரு பெரிய மலைப்பாகத் தெரியாது.

இது ஒருதற்காலிகப் பிரச்சினையே! ஏற்கெனவே நாம் பெற்றிருக்கும் அனுபவத்தை வைத்து, இதை நாம் வென்றுவிட முடியும்!, என்கிற உற்சாகக் காற்றை இதய பலூனில் நிரப்பிக்கொள்ளவேண்டும்.

இந்த மனநிலை, மலைத்து விடாமலும், சோர்ந்து விடாமலும், திறமையாகவும் பிரச்சினைகளைச் சமாளிக்க நமக்கு மிகவும் உதவும்.

# குடாநாட்டு சந்தை நிலவரம்

| பொருட்கள் | சுன்னாகம் | நெல்லியடி | யாழ்ப்பாணம் | மருதனார்மடம் | திருநெல்வேலி | சங்கானை | சாவகச்சேரி | பருத்தித்துறை |
|---|---|---|---|---|---|---|---|---|
| பயிற்றங்காய் | 60/= | 70/= | 70/= | 70/= | 55/= | 50/= | 60/= | 80/= |
| வெண்டிக்காய் | 20/= | 20/= | 35/= | 40/= | 20/= | 22/= | - | 40/= |
| உருளைக்கிழங்கு | 40/= | 60/= | 40/= | 40/= | 40/= | 80/= | 40/= | 50/= |
| கத்தரிக்காய் | 30/= | 40/= | 30/= | 25/= | 40/= | 25/= | 80/= | 55/= |
| பாகற்காய் | 30/= | 40/= | 35/= | 40/= | 25/= | 35/= | 60/= | 40/= |
| கரட் | 40/= | 40/= | 45/= | 50/= | 40/= | 30/= | 40/= | 45/= |
| பீற்றூட் | 30/= | 40/= | 30/= | 30/= | 20/= | 25/= | 30/= | 40/= |
| முருங்கைக்காய் | - | - | - | - | - | - | 160/= | - |
| வெங்காயம் | 30/= | 40/= | 30/= | 25/= | 25/= | 45/= | 30/= | 40/= |
| பச்சை மிளகாய் | 60/= | 50/= | 50/= | 50/= | 45/= | 90/= | 50/= | 40/= |

## புலம்பெயர் வாழ்வின் பதிவுகள் - பகுதி VI - சிவா



# தொடரும் அகதிவாழ்வின் அவலங்கள்

*(நேற்றைய தொடர்ச்சி...)*

பின்னர் 8 மணிக்கு வேலைமுடிந்து வீட்டுக்குவர 9 மணியாகும். வீடு துப்பரவாக்கிக் குளித்து மதியச் சமையல் செய்துமுடிக்க பகல் 1 மணியாகிவிடும்.

அரைகுறையாகச் சாப்பிட்டுவிட்டு மாலை வேலைக்கு இறங்கவேண்டும். (வீட்டைவிட்டு வெளியேபோவது என்பதை பாரிஸ் தமிழர்கள் 'இறங்குவது' என்று சொல்வார்கள்). அந்த வேலை - அவளது வீட்டுக்கு அருகில் என்றபடியால், அந்தத் தொடருந்துத் தரிப்பிட டிப்போவுக்குச் செல்ல 30 நிமிடங்கள்போதும்.

மாலை 7 மணிக்கு வேலை முடிந்து வீட்டுக்குவர ஏழரை மணியாகும். பின்னர் பிள்ளைகளைப் பக்கத்து வீட்டிலிருந்து அழைத்து வந்து, சாப்பாடு கொடுத்து, விட்டை ஒழுங்குபடுத்தி, இரவு பத்து மணிக்கு வீட்டுக்குவரும் கணவனுக்காகக் காத்திருந்து, படுக்கச்செல்வதற்கு இரவு பதினொரு மணியாகிவிடும். பின்பு மறுநாள் அதிகாலை நான்கு மணிக்கு எழுநதேயாகவேண்டும்.

இந்தச் சம்பவம் நடந்த அன்று சுமதிக்கு உடல்நிலை சரியில்லாமலிருந்தது. அரைமணி நேரம் கூடநித்திரை கொண்டுவிட்டாள். நாலரை மணிக்கு எழும்பி, அவசர அவசரமாக வேலைகளை முடித்துவிட்டு, வேலைக்கு இறங்கியபோது, அவள் வழக்கமாக முடிக்கும் 5.20 மெத்திரோ போய்விட்டது. அடுத்த மெத்திரோ 5.23 இற்கு வந்தது. அதில் சென்று இறங்கி, நிலத்துக்குமேலே வெளியே வந்தபோது, அவள் பிடிக்கவேண்டிய 53 ஆம் இலககப் பேருந்து புறப்படத் தயாராகிக்கொண்டிருந் தது.

சுமதி நின்ற மெத்திரோ நிலையத்தின் வாசலுக்கும் - அந்தப் பேருந்து நின்ற இடத்திற்கும் இடையில் 50 மீற்றர் தூரம் இருக்கும்.

அவள் ஓடிச்சென்று பேருந்தின் நுழை வாயிலை அண்மிக்கவும், பேருந்தின் ஓட்டுநர்-கதவை மூடவும் நேரம் சரியாக இருந்தது.

சுமதி ஓடிச்சென்ற வேகத்தில் மூடிக்கொண்டிருக்கும் கதவில் மோதி, நிலத்தில் சரிய - ஏற்கனவே பனி கட்டிகட்டியாக உறைநது போயிருந்த பனிக்கட்டி வழுக்கி, அவளைப் பேருந்தின் அடியில் தள்ள, பேருந்து ஓட்டுநர் அவள் விழுந்ததை அறியாமல் பேருந்தை வேகப்படுத்த, ஒருசில விநாடிகளில் ஒரு அப்பாவிப் பெண்ணின் வாழ்க்கை முடிந்துவிட்டது.

◆

பிராங்போட் நகரத்தை ஊடறுத்துச் செல்லும் ரெஹலி நதியில் 35 வயதுடைய தமிழ் இளைஞன் குதித்துவிட்டான்.

மாலை 5 இற்கும் 8 இற்கும் இடையிலான உறைபனிக் குளிர்நிலையில், ஆற்றுத் தண்ணீரின் மேற்பகுதியில் இருந்த பனிப்பாலத்தை உடைத்துக்கொண்டு. அடிப்பகுதிக்குச் சென்ற அந்த இளைஞனின் சடலம் - மிகுந்த சிரமத்தின் மத்தியில் பிராங்போட் நகர முதலுதவிப் படையினரால் மீட்கப்பட்டது.

யாழ்ப்பாணம் கோப்பாய் பகுதியைச் சேர்ந்த அந்த இளைஞனின் அப்பா கூட்டுறவுத் திணைக்கள அதிகாரி. அம்மா ஆங்கில ஆசிரியர். ஒரு தம்பி, ஒரு தங்கை. இதுதான் அவர்களது குடும்பம்.

அவன் - தான் தற்கொலை செய்வதற்கு முடிவெடுத்ததற்கான காரணத்தை ஜேர்மன் காவல்துறையினருக்கு எழுதிய கடிதத்தில் விளக்கியிருந்தான். தான் அதிகளவுக்கு நம்பிக்கையும் பாசமும் வைத்திருந்த தனது பெற்றோர் தன்னை ஏமாற்றிவிட்டதாகவும், தன்னைவிட தான் அனுப்பும் பணம்தான் தனது பெற்றோருக்கு முக்கியம் என்றும் அவன் தனது கடிதத்தில் தெரிவித்திருந்ததாக அவனது தற்கொலை தொடர்பாகச் செய்தி வெளியிட்ட பிராங்போட் நகர - பத்திரிகை அல்ஹமைன் தெரிவித்திருந்தது.

தனக்கு உறவென்று சொல்வதற்கு யாருமே இல்லை என்றும், தன்னுடைய உடல் கண்டெடுக்கப்பட்டால், அதை அரச செலவிலேயே அடக்கம்செய்து விடும்படியும் அவன் வேண்டுகோள் விடுத்திருந்ததாகவும், அந்தப் பத்திரிகை தனது செய்தியில் குறிப்பிட்டிருந்தது.

அந்த இளைஞனின் தற்கொலை தொடர்பாக ஆராய்ந்தபோது, அவனது நண்பர்கள் தெரிவித்த தகவல்கள் அதிர்ச்சியளிக்கக் கூடியவையாக இருந்தன.

**அவனது குடும்பத்தைப் பொறுத்தளவில் அம்மா மிகவும் ஏழ்மை நிலையிலுள்ள குடும்பத்தைச் சேர்ந்தவர். அப்பா மிகவும் வசதியான குடும்பத்திலிருந்து வந்தவர். இருவரும் காதலித்துத் திருமணம் செய்திருந்தார்கள். அப்பாவுக்கு இரண்டு சகோதரர்கள். அவர்கள் லண்டன் மற்றும் மலேசிய தொடர்புகள்மூலமாகப் பெரும் செல்வச்செருக்கில் மிதந்தார்கள். சதீஸின் அம்மாவை அவர்கள் எப்போதும் அவமானப் படுத்துவதையே நோக்கமாகக் கொண்டிருந்தனர்.**

சதீஸ் 1980 ஆம் ஆண்டு ஜேர்மனிக்குச் சென்றிருந்தான். அப்போது அவனுக்கு வயது 20 தான் ஆகியிருந்தது.

தொடக்க காலத்தில் பிராங்போட் நகர அகதிமுகாமில் தங்கியிருந்த அவன் -இறைச்சி பதனிடும் தொழிற்சாலை ஒன்றில் வேலை கிடைத்ததும், நண்பர்களுடன் சேர்ந்து வாடகை வீடொன்றில் குடியேறினான்.

அவனது குடும்பத்தைப் பொறுத்தளவில் அம்மா மிகவும் ஏழ்மை நிலையிலுள்ள குடும்பத்தைச் சேர்ந்தவர். அப்பா மிகவும் வசதியான குடும்பத்திலிருந்து வந்தவர். இருவரும் காதலித்துத் திருமணம் செய்திருந்தார்கள். அப்பாவுக்கு இரண்டு சகோதரர்கள். அவர்கள் லண்டன் மற்றும் மலேசிய தொடர்புகள் மூலமாகப் பெரும் செல்வச் செருக்கில் மிதந்தார்கள். சதீஸின் அம்மாவை அவர்கள் எப்போதும் அவமானப்படுத்துவதையே நோக்கமாகக் கொண்டிருந்தனர்.

அவர்களுடைய பிள்ளைகளும் செல்வச் செருக்கில் தங்களை இழிவுபடுத்துவதைக் கண்டு, தனது தாய் மனம் நொந்து அழுவதைச் சதீஸ் சிறுவயதில் இருந்தே பார்த்து வந்திருக்கிறான்.

தான் பெரியவன் ஆனதும் வெளிநாட்டுக்குச் சென்று, நிறையப் பணம் சம்பாதித்து, தனது அம்மாவையும், தம்பி, தங்கையையும் வசதியாக வாழவைக்கவேண்டும் என்ற கனவு சிறுவயதிலிருந்தே அவனுக்கு இருந்தது.

ஜேர்மனிக்குச் சென்றுபோதும் அதே எண்ணமே அவனுக்கு இருந்தது. அவன் வேலை செய்யும் இறைச்சி பதனிடும் தொழிற்சாலையில் மேலதிக நேரம் வேலை செய்வதற்கான வாய்ப்புகள் அதிகமாக இருந்தன. அவன் பல நாட்கள் 12 முதல் 13 மணிநேரம்கூட வேலை செய்திருக்கிறான். அவன் விரும்பியபடி நிறையப் பணத்தை ஊருக்கு அனுப்பி, தனது குடும்பத்தை வசதியுடன் வாழவைத்திருக்கிறான்.

தமிழ் இயக்கம் ஒன்றின் அபிமானியாக இருந்த அவனது தந்தை - இந்தியப் படையினர் யாழ்ப்பாணக் குடாநாட்டை விட்டு வெளி யேறியபோது, தானும் அங்கிருந்து வெளியேறி, கொழும்பு தெஹிவளைப் பகுதியில் சொந்த வீடு வாங்கிக் குடியேறினார்.

இந்தக் காலகட்டத்தில் அவனது தங்கைக்குத் திருமணமாகி, கணவருடன் கனடாவிற்கு சென்றுவிட்டாள்.

பொறியியல் பட்டப்படிப்பு படித்த அவனது தம்பியும், தான் காதலித்த பெண்ணைத் திருமணம் செய்துகொண்டு அவுஸ்ரேலியாவுக்குச் சென்றுவிட்டான்.

இது இவ்வளவும் சதீஸினுடைய சம்மதத்துடன், அவனுக்குத் தெரிந்தே நடந்தது. 1992 ஆம் ஆண்டு அவனுக்கு 32 வயதாகியும், அவனுக்கு ஒரு திருமணம் செய்து வைக்கவேண்டும் என்று அவனது அப்பாவோ, அம்மாவோ நினைக்கவில்லை. அவனது தம்பி, தங்கைகள்கூட தாங்கள் திருமணம் செய்தபோது, அண்ணனுக்கு திருமணம் செய்து வைக்கவேண்டும் என்று எண்ணவில்லை.

அவர்களைப் பொறுத்தவரை அவனைத் தங்க முட்டையிடும் பொன் வாத்தாகத்தான் பார்த்தார்கள். 1992 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் அவனாக விரும்பிக் கேட்டுக்கொண்ட தற்கிணங்க, பெண் பார்க்கும் படலம் நடந்தது. தனக்கு மனைவியாக வரப்போகும் பெண் ஏழைக்குடும்பத்தைச் சேர்ந்தவளாய் இருக்கவேண்டும் என்றும், எந்தக் காரணத்தைக் கொண்டும் சீதனம் வாங்கக்கூடாது என்று சதீஸ் நிபந்தனை விதித்திருந்தான்.

*(தொடரும்...)*

## வாழ்வியல் ஆர்.கே.மேனன் - ஆசிரியர் நெடுந்தீவு மகா வித்தியாலயம்

# இலட்சியப்போக்கான இன்றைய இளைஞர்கள்



**வா**ழ்க்கையில் பல்வேறு கட்டங்கள் உணடு. இதில், வாலிபம் என்பது மிகமுக்கியமான கட்டம். இன்றைய சமூகம் இதை உணருவது சற்றுக்குறைவு. வெறுமன காதல் உணர்ச்சிகளுக்கும், சந்தோச களியாட்டங்களுக்கும், சகபாடிக் கொண்டாட்டங்களுக்கும் எம்மை மற்றவர் பார்க்கவேண்டும் என்கின்ற ஓர் குறுகிய செயற்பாடுகளுக்கு மாத்திரம்தான் இந்த வாலிபம் என்கின்ற எண்ணக்கருவே எம்மவர் மத்தியில் நிலைத்திருக்கின்றது.

இதற்காக இந்த வாலிபச் செயற்பாடுகளை ஒட்டுமொத்தமாக நான் நிராகரிக்கவில்லை. மானிட உளவியலில் இவையெல்லாம் ஒரு கட்டம்தான். ஆளுமை வளர்ச்சிக்கு இவையெல்லாம் அவசியம்தான். ஆனால், உயர வேண்டிய எமது சமூகம் - பல்வேறு ஆய்வுகள் மூலம் பார்க்கின்றபோது, மற்றைய நாடுகளோடு ஒப்பிடும்போது, மிகவும் கவலைக்குரிய இடத்தில் இருக்கின்றது.

இதற்கு யார் காரணம்? ஏன் இந்த நிலை? வாலிபப்பருவத்தினரது இலட்சியப் போக்குக் குறைந்தமையே இதற்கு முக்கிய காரணமாகும்.

ஒருவரது வாழ்க்கையில் வாலிபம் எனபது மிகமுக்கியமான பருவம். இதில்தான் அவனது எதிர்காலமே அடங்கியுள்ளது. ஒருவர் எப்படி இதைக் களிக்கின்றார் எனபதைப் பொறுத்தே அவரது வாழ்க்கை தீர்மானிக்கப்படுகின்றது.

சுவாமி விவேகானந்தர் ஓர் இடத்தில் சொல்கிறார் - 'இரும்பு மனம் கொண்ட 100 இளைஞர்களை எனக்குத் தாருங்கள். இந்த இந்தியாவையே ஒருகணம் மாற்றிக்காட்டுவேன்' என்று. பாருங்கள் - அவர் ஏன் இளைஞர்களைக் கேட்கின்றார்? இவர்களால் முடியாதென்று எதுவுமேயில்லை.

சாதிக்கப்படைத்த பருவம் இது எனப் பல ஆய்வாளர்கள் சொல்வார்கள். ஏன் அவ்வாறு சொல்கின்றனர். நினைத்ததைச் செய்து முடிக்கின்ற ஒரு வைராக்கியம், விமர்சனங்களைக் கணக்கில் எடுக்காத ஒருபோக்கும், எதற்கும் பயப்பிடாத ஓர் இறுமாப்பும் இந்தப் பருவத்திற்கு மாத்திரம்தான் உள்ளது.

இந்த மனநிலை - ஒருசில விடயங்களில் தோல்வியைக் கொடுத்தாலும்கூட, பெரும்பாலான விடயங்களில் வெற்றியைத்தான் கொடுக்கும் என்பது எனது அனுபவம்.

எமது யாழ்.மாவட்டத்தைப் பொறுத்தவரையில் எத்தனையோ ஆற்றல் மிகுந்த இளைஞர்களின் அசமந்தப் போக்கால், அவர்களது எதிர்காலம் கேள்விக்குறியாக இருக்கின்றது. கட்டடத்தைத் தாங்கவேண்டிய தூண்களே தமது பலத்தை உறுதிப்படுத்தாவிட்டால், எப்படி அந்தக் கட்டடங்கள் நிலைத்து நிற்கப்போகிறது.

ஆகவே, நிச்சயம் பொதுப்பார்வையான எதிர்காலங்களை உறுதிப்படுத்தாவிட்டாலும், எமது சுயநலத்தோடுகூடிய எதிர்காலத்தை என்றாலும் நாம் உறுதிப்படுத்தவேண்டியதேவை எமக்கு இன்றியமையாததாகிப் போய்விட்டது.

இன்று எமது இளைஞர், யுவதிகள் மத்தியில் ஏற்பட்டுள்ள மனக்கிளர்ச்சிக்கு அடிப்படை - வேலையில்லாப் பிரச்சினை. இந்தக் கட்டத்தில்தான் சிந்தித்துப் பாருங்கள். இது மிக ஆழமான கட்டம். எமது வாழ்க்கையோ ஒரு கொஞ்சக்காலம். அதிலும் வாலிபம் என்பது மிகக் குறுகிய பருவம். இதில், அடுத்தவனைக் குறைகூறிக் கொண்டும், எமக்குச் சாதகமான சூழல் எம்மைத்தேடி ஒரு காலம்வரும்- போர்ச்சூழலில் எதைச்செய்வது என்று எதிர்பார்த்துக் காத்திருப்பதிலே எமது காலம் போகிறது. வாழ்க்கை என்பது பிரசசினைகளுக்கு ஊடாக ஊடறுத்துச் செல்வதுதான்.

இலங்கைத் தமிழ் மக்களது போராட்ட காலத்தை எண்ணிப்பார்க்கின்றபோது, அதில் ஒரு பரம்பரையின்காலமே முடியப்போகிறது போல் இருக்கிறது. அப்படியானால், அந்தப் பரம்பரை வாழ்வதில்லையா?.

என்னைப் பொறுத்தவரையில் நாம் சரியாக வாழமுடியாதிருக்கிறது என்று இந்த உலகத்தில் எதையுமே சாட்டாகச் சொல்லமுடியாது. தன்னம்பிக்கை உள்ளவன் எங்குமே முன்னேறலாம். யப்பான் வரலாற்றைச் சற்றுப் புரட்டிப்பாருங்கள். எதுவிதவளமும் இல்லை. ஹிரோசிமா நகரின் வெக்கைகூட இன்னும் அடங்கவில்லை. இன்று உலக உற்பத்தியில் யப்பான் முன்னணி பெறவில்லையா? எமது இளைஞர், யுவதிகள்போல் அங்கும் அரச உத்தியோகத்தை ஒவ்வொருவரும் நம்பி இருந்திருந்தால், இன்று ஜப்பான் - அமெரிக்காவின் அதிகாரத்திற்கு ஆண்டியாக இருந்திருக்கவேண்டும்.

இப்படியானால், எப்படி முனனேறுவது என்கிறீர்களா? இங்குதான் இலட்சியம் என்பது தலைதூக்குகின்றது. இலட்சியம் இல்லாத மனிதன் என்று யாரும் இல்லை. களவெடுப்பவனுக்கும் ஒரு இலட்சியம் உண்டு, காசிக்குச் செலபவனுக்கும் ஓர் இலடசியம் உண்டு, கடவுளைத் தொழுபவனுக்கும் ஒரு இலட்சியம் உண்டு, காமத்தில் மூழ்குபவனுக்கும் ஒரு இலட்சியம் உண்டு. ஆனால், ஒவ்வொருவரது இலட்சியத்தைப் பொறுத்தே அவனது எதிர்காலம் தீர்மானிக்கப்படுகிறது. வாழ்க்கையில் ஓரளவு சுயசிந்தனை தொடங்கிய காலத்திலிருந்தே எம்மை நாம் ஆழமாகச் சிந்திக்கத் தொடங்க வேண்டும்.

**எமது பலம் என்ன? பலவீனம் என்ன? எத் துறை என்னை வளம்படுத்தும்? எனது அடிப்படைக் குணங்கள் என்ன? என்னைச் சுற்றியுள்ள சமூக எதிர்பார்ப்பு என்ன? எப்படி நான் அந்தச் சமூகத்தில் துலங்கவேண்டும் என்றெல்லாம் சற்று விரிவாகச் சிந் திக்க தொடங்கவேண்டும்.**

எமது பலம் என்ன? பலவீனம் என்ன? எத் துறை என்னை வளம்படுத்தும்? எனது அடிப்படைக் குணங்கள் என்ன? என்னைச் சுற்றியுளள சமூக எதிர்பார்ப்பு என்ன? எப்படி நான் அந்தச் சமூகத்தில் துலங்கவேண்டும் என்றெல்லாம் சற்று விரிவாகச் சிந்திக்க தொடங்கவேண்டும்.

அந்தச் சிந்தனைகளை அடிப்படையாகக கொண்டு மிகவும் அவதானமாக சிந்தித்து, எனக்குள்ளே என்னைப் பற்றி ஓர் எல்லைபோட வேண்டும். இது ஒரு சாதாரண விடயமல்ல. இதில் பல உளவியல் பகுதிகள் தங்கியுள்ளது. இதில் ஏற்படும் மாறுதல்கள் பல விபரீதமான விளைவுகளுக்கு இட்டுச்சென்றுவிடும். (அதாவது, என்னைப் பற்றி நானே போட்ட தவறான கணிப்பால்) எமக்கென்று ஓர் தனித்துவமான அம்சங்கள் உண்டு. அதை எந்தக் கட்டத்திலும் நாம் மாற்றப் போகக்கூடாது. அது விபரீத மாகிவிடும்.

அது எமது அனுபவம், ஆளுமை பாங்குக்கேற்ப சீர்படுத்தலாமே தவிர, மாற்ற முற்படக்கூடாது. இவற்றையெல்லாம் பொறுத்து எம்மைப் பற்றி நாம் தெளிவான நிலைக்கு வந்தபின்பு, சுயமாக எமது இறுதிக்கட்ட இலககு என்ற எண்ணக்கரு உருவாகும். இதற்குப் பெயர்தான் இலட்சியம். பின்பு இந்த இலட்சியத்தை நன்கு பரிசீலித்துப் பார்க்க வேண்டும்.

இந்த இலட்சியப் போக்கால் எனது வாழ்க்கையில் ஏற்படப்போகும் வெற்றி வீதம் என்ன? இதில் வரப்போகும் தடங்கல் என்ன? அதை எப்படி சீர்செய்யலாம் என்ற இந்த இலடசியக் கொள்கை - எனது சமூக எதிர் பார்ப்புக்கு மத்தியில் சரியா? தவறா? இப்படியெல்லாம் சிந்திக்க முற்படவேண்டும்.

முடிவெடுக்கமுன் சிந்திக்கலாம். முடிவெடுத்தபின் தளம்புவது முழுவதையுமே பாழாக்கிவிடும். பின்பு இலட்சியங்கள் - குறிக்கோளை அடிப்படையாகக் கொண்டு இரும்பு மனதை உருவாக்கவேண்டும்.

இது சம்பந்தமாக வரும் எந்தப் பிரச்சினைக்கும் நான் தலைகொடுப்பேன். எதுவாக இருந்தாலும் இதை அடைவதே எனது நோக்கம் என்னும் எண்ணக்கரு ஆழமாகப் புடமிடப்படவேண்டும். இதுவே உங்களுக்கு வெற்றியை நிர்ணயிக்கும்.

எதுவுமே செய்யலாம், செயல்படுத்துவதில் தான் பிரச்சினையே உள்ளது என்று சிந்திக்கிறீர்களா? ஆம் அதற்குத்தான் நான் சொல்லும் பதில் - இதுதான் நேர் வழி. இதற்கூடாக போ என்று நான் கூற, இடையில் ஓர் மரத்தைக் கண்டவுடன் ஐயோ நேராகத்தானே போகச்சொன்னார். இடையில் ஒரு மரம் நிற்கிறதே என்று அந்த மரத்தை விலத்திப் போகத்தெரியாத மனிதன் என்று எவரையும் சொல்லமுடியாது.

உங்களது வரலாற்றை நீங்கள்தான் எழுதலாம். மற்றவர் எழுதமுடியாது. ஏனெனில், இது உங்களது வாழ்க்கை. ஒரு சிலவற்றை சொல்லலாமே தவிர, அதை விடுத்து உங்களது வாழ்க்கைக் கூடாக அதை என்னால் நடைமுறைப்படுத்தமுடியாது. ஏனெனில் உங்களது வாழ்க்கை உங்களுக்கே சொந்தம்.

மாநகராட்சி
யாழ்ப்பாணம்.



நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*தன்உயிர்க்கு இன்னாமை தான்அறிவான் என்கொலோ*
*மன்உயிர்க்கு இன்னா செயல்.*

-திருக்குறள்.

## நமது நோக்கு

### திசை மாறிய இளைஞர்களும் திசை மாற்றிய சக்திகளும்...

யாழ். குடாநாட்டில் என்றுமில்லாத அளவில், கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு குற்றச் செயல்கள் அதிகரித்து வருவதானது, சமூகப் பொறுப்புள்ளவர்கள் மத்தியில் அதீத கவலையை ஏற்படுத்தியுள்ளது. பொதுவாக குடாநாட்டு இளைய சமூகத்தவரிடையே மிக ஆபத்தான தொற்றுநோயாக வேகங்கொண்டுவரும், குற்றச்செயல்களை ஒரு கலாசாரமாகவே ஏற்றுக்கொண்டு மகிழும் மனோபாவமானது அவர்களின் எதிர்காலத்தையே சூனியமாக்கும் தன்மை கொண்டது என்பதை அவர்கள் உணராமல் இருப்பது தான் வேதனைக்குரிய விடயமாகும்.

ஆக்கிரமிப்பு இராணுவத்தினருக்கும், ஆதிக்க வெறி பிடித்த ஆட்சியாளரின் அடக்குமுறைக்கும் இடையில் அல்லற்பட்டு அவலங்களுக்கிடையே வாழ்ந்து கொடுமைகளுக்கு எதிராக குரல் கொடுத்தும், போராடியும் நிமிர்ந்து நின்ற யாழ்.குடாநாட்டு இளைய சமூகத்தவரிடையே 1995 க்குப் பின் அதாவது, ஒரு தசாப்தகாலத்திற்கும் குறைவான காலப்பகுதிக்குள் இத்தகைய குற்றச்செயல் களுடன் உறவாடும் கெடுமதி எப்படி உரு வாயிற்று என்ற கேள்விக்கு விடை தேடுதல் கடினமான தொன்றல்ல.

அதனை ஆராயப் புகுந்தால் அது பல்வேறு பிரச்சினைகளை இனம்காணவும் வைக்கும். ஏற்கனவே, அனுபவ ரீதியில் அறிந்து கொண்டோர் கூறும் பட்டறிவுக் கருத்துக்கள் கவலையை மட்டுமல்ல ஆத்திரத்தையும் தூண்டுபவையாகவே உள்ளன.

சமாதான சூழல் தோன்றி ஈராண்டு கடந்த பின்னரும் கூட இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியமர்வு சாத்தியமற்ற நிலையில் அன்றாடம் அவர்கள் படும் அவலங்களும், அதிலிருந்து அவர்கள் மீள, நடத்தும் போராட்டங்களும் இதயங்களை வலிக்கவைத்துவரும் வேளையில் இளைஞர்கள் பொறுப்புணர்வற்றவர்களாகி, தத்தம் சமூக அந்தஸ்திலிருந்து கீழிறங்கி, சமூக விரோதச் செயல்களில், குற்ற நடவடிக்கைகளில், ஆயுதபாவனைகளுடன் கூடிய வன்முறைகளில், பெண்களுக்கெதிரான பாலியல் கொடுமைகளில் ஈடுபட்டு அவமானங்களைச் சுமக்கும் நிலைக்கு தம்மைத் தாமே ஆட்படுத்தி வருவதுதான் வெட்கப்பட வேண்டிய விடயமாகும்.

ஒருகாலத்தில் யாழ். குடாநாட்டு இளைய சமூகத்தவர்கள் தங்களைக் கல்விசார், தொழில்சார் சமூகத்தின் கௌரவத்திற்கும், பாராட்டிற்கும் உரியவர்களாக இனம் காட்டுவதிலேயே விருப்பார்வம் கொண்டவர்களாக விளங்கினர் என்பது தெரிந்த விடயமே.

இன்றைய தமிழ்மக்களின் விடுதலைப் போராட்டம், தமிழ் மாணவர்களின் கல்வியைச் சீரழிக்கும் வகையில் தரப்படுத்தல் என்ற திட்டத்தை அப்போதைய அரசு அமுல் செய்ததையடுத்தே வேகம் கொள்ள ஆரம்பித்தது என்பதையும் அனைவரும் அறிவர்.

இத்தகைய தன்மையுடன் கூடிய அறிவுசார் பாரம்பரியத்தின் வழித்தோன்றல்களாக மிளிரவேண்டிய குடாநாட்டு இளைய சமூகத்தவரின் மனோபாவத்தைச் சிதைத்து அவர்களின் மனித இயல்பை நச்சுப்படுத்திய காரணிகள் பலவாகும்.

குடாநாடு இராணுவம் கையில் சிக்கியதையடுத்து, ஏதோ ஒருவகை உளவியல் நடவடிக்கையின் அங்கமாக, ஊடுருவிய கலாசார மற்றும் பண்பாட்டுச் சீரழிவுகள் இளைஞர்களை - அதுவும் தமிழ் இளைஞர்களை குறிவைத்து திட்டமிட்ட வகையில் தமிழின விரோத சக்திகளால் பரப்பப்பட்டவை என்பதற்கு ஆதாரம் நிறையவே உண்டு.

சந்திக்குச் சந்தி மதுக்கடைகள், கட்டுப்பாடற்ற போதை வஸ்துப் பரம்பல், வக்கிர உணர்வுகளைத் தூண்டிவிடும் நீலப்படங்களின் விநியோகங்கள் என இளைய சமூகத்தவரின் மனதில் அராஜக சிந்தனைப் போக்கினை ஊக்குவித்து வளர்க்கும் சகல விதமான அம்சங்களும் படையினரின் வருகையை அடுத்து குடாநாட்டில் ஊடுருவியமையே அனைத்து அனர்த்தங்களுக்கும் காரணமாகும்.


தரங்கெட்ட, வன்முறையைக் காசாக்கும் - ஆபாசத்தைக் கலையாக்கும் தமிழ் சினிமாக்களின் வரண்முறையற்ற இறக்குமதியும் இதற்கு இன்னொரு காரணமாகும். தென்னிந்தியத் திரைப்படங்களின் வீச்சரிவாள் கலாசாரம் இதற்குச் சிறந்த உதாரணம் ஆகும் - இன்றைய தமிழ்த் திரைப்படத்தின் நர்யகர்கள் வில்லத்தனத்தின் சிகரங்களாகச் சித்தரிக்கப்படுவதும், அடிதடி வன்முறை செய்தலின் கதாநாயகனின் இலக்கணமாக வரையறுக்கப் பட்டுள்ளமையும்கூட, இளைஞர்களின் மனத்தை குற்றச் செயல்களின் பக்கம் மாற்றக்காரணமாகும்....

இவையனைத்தும் சமாதானச் சூழல் உருவாகுமுன்னர் இங்கு தூவப்பட்ட நச்சு விதைகளாகும். இவற்றின் விளைச்சலையே இப்போது குடாநாட்டு இளை ஞரின் வன்முறை - குற்றவியல் நடவடிக்கைகளில் இனங்காணக்கூடியதாக உள்ளது. இந்தநிலைமை நீடிப்பது எமது இனத்தை நாமே அழிப்பதற்கு இடங்கொடுத்ததாகி விடும்.

தமிழ் இளைய தலைமுறையினரை மந்த புத்தியுள்ள - குற்றச்செயல்களைப் புரியும் உளவியல் கோளாறு கொண்டவர்களாக்கி, அழிவுப் பாதைக்கு இட்டுச்செல்லும் செயற்பாடுகளில் இருந்து திசைமாற்றி அவர்களை ஆரோக்கியமான சிந்தனைகொண்ட சமூகமாக மாற்றும் பொறுப்பு தமிழ்மக்களின் கடமையும், பொறுப்புமாகும்.

காவல் துறைப்பொறுப்பாளரின் இதற்கான அறைகூவல் காலத்தின் அவசியத்தை உணர்த்துவதாதகவே உள்ளது.

## நாடும் நடப்பும்




# தேர்தல் தொகுதிகளில் சமாதான குழு அமைக்க ஐக்கிய தேசிய கட்சி முடிவு

தேர்தல் தொகுதிகள் அனைத்திலும் சமாதானக் குழுக்களை அமைப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சி முடிவுசெய்துள்ளது.

எதிர்வரும் 22 ஆம் திகதி முதல் இந்தக் குழுக்களை ஐக்கிய தேசியக் கட்சி நியமிக்கவுள்ளது.

எதிர்வரும் தேர்தலில் இந்த சமாதானக் குழுக்கள் மூலமாகவே தன்னுடைய சமாதான நடவடிக்கைகளை மேற்கொள்ள ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின்கீழ் இயங்கும் சமாதானத்திற்கான ஜனநாயக அமைப்பு, இந்த நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளது.

சமாதானத்தை வலியுறுத்தி இந்த அமைப்பினால் எதிர்வரும் 22 ஆம் திகதி மாபெரும் கூட்டமொன்றும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து ஒவ்வொரு தேர்தல் தொகுதிகளிலும் இந்த சமாதானக் குழுக்கள் அமைக்கப்படவுள்ளன.

சமாதானத்தின் தேவை, ஜனாதிபதி நாடாளுமன்றத்தைக் கலைத்தமையால் தோன்றிய குழப்பநிலை, இதன் காரணமாக சமாதானம் கேள்விக்குறியாகியமை, அதனால் பொருளாதார அபிவிருத்தியில் ஏற்பட்ட தாக்கம் என்பன கேள்விக்குறியாகி இருப்பதாக ஐக்கிய தேசியக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

இதன் காரணமாகவே சமாதானக் குழுக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அந்தக் கட்சி மேலும் தெரிவித்தது. (01)

## அமைச்சர்களின் பிள்ளைகளுக்கு 177 ஏக்கர் அரச காணிகள் விற்பனை!

(கொழும்பு)

அரசாங்கத்துக்குச் சொந்தமான 177 ஏக்கர் காணிகள் - ஐக்கிய தேசிய முன்னணியில் உள்ள இரு அமைச்சர்களின் மகன், மகள்மாருக்கு குறைந்த விலையில் விற்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் தி.மு.ஜயரத்ன தெரிவித்தார்.

கண்டியில் 67 ஏக்கர் நிலம் அமைச்சர் ஒருவரின் மகனுக்கு விற்கப்பட்டுள்ளது. இந்த நிலம் பேர்ச்ஸ் 60 ஆயிரம் பெறுமதியாகும். ஆனால், இதன் பெறுமதிக்கு குறைவான விலையில் இந்த நிலம் விற்கப்பட்டது.

தேசியப்பட்டியல்மூலம் நாடாளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட அமைச்சர் ஒருவரின் மகளுக்கு 110 ஏக்கர் நிலம் விற்கப்பட்டது. இதுவும் குறைந்த விலையிலேயே விற்கப்பட்டிருப்பதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## தேவையற்ற தேர்தல்; வினாயகமூர்த்தி தெரிவிப்பு!

(கொழும்பு)

நாடாளுமன்றத் தேர்தல் ஒரு தேவையற்ற தேர்தல் என நான் கருதுகிறேன். ஏனென்றால், ஐக்கிய தேசிய போதிய பெரும்பான்மையுடன் இருக்கும்போதும் ஜனநாயகத்திற்கு விரோதமானமுறையில் சந்திரிகா நாடாளுமன்றத்தைக் கலைத்திருக்கின்றார்.

இவ்வாறு தமிழ்க் காங்கிரஸ் தலைவர் அ.விநாயகமூர்த்தி பி.பி.சி. தமிழோசைக்கு வழங்கிய செவ்வியிலேயே குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் - இது அநாவசியச் செலவை ஏற்படுத்தும். ஆனால், விடுதலைப் புலிகளோடு ஒத்துழைப்பதுதான் எங்களது நிலைப்பாடு. என்ன கோட்பாட்டுக்காக நாங்கள் நாடாளுமன்றம் சென்றோமோ அந்தக் கோட்பாடு தொடரவேண்டும்.

தமிழர் தேசிய கூட்டமைப்பினர் பொதுச் சின்னத்துக்கு மாத்திரம் வாக்களிக்குமாறு கேட்டுள்ளனர். ஆனால், என்னைப் பொறுத்தவரையில் மக்களுக்கு, தாம் விரும்பும் நாடாளுமன்ற உறுப்பினரைத் தெரிவுசெய்யும் சுதந்திரம் உண்டு. அவர்கள் அப்படிச் செய்யவேண்டும் என்பதே கட்சியின் விருப்பமாகும்.

தமிழ் தேசிய கூட்டமைப்பினர் தேர்தலில் நிற்பதனால், கட்சிகளுக்கிடையில் பிரச்சினை தோன்றுவதற்கு இடமில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# இலங்கை - இந்திய கடல் எல்லையில் சூரியசக்தியில் இயங்கும் மிதவை விளக்கு

## அமைச்சர் இராதாகிருஷ்ணன் தகவல்

இந்தியா - இலங்கை கடல் எல்லையில் சூரியசக்தியில் இயங்கும் மிதவை விளக்குகள் விரைவில் அமைக்கப்படும் என்று அமைச்சர் இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

தமிழக சட்டசபையில் நேற்றுமுன்தினம் கேள்வி நேரத்தின்போது, பா.ஜ.க. உறுப்பினர் ஜெகவீரபாண்டியன் எழுந்து, மீனவர்களுக்குக் கடலில் இரவும், பகலும் எல்லை தெரியும் வகையில் வழிகாட்டும் விளக்குடன்கூடிய மிதவைகள் நிறுவும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா? என்று கேட்டார்.

இதற்குப் பதிலளித்துப் பேசிய மீன்வளத்துறை அமைச்சர் இராதாகிருஷ்ணன் - தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் அடிக்கடி தாக்கப்படுகிறார்கள். தமிழக மீனவர்கள் இலங்கை எல்லைக்குப் போய்விடுவதால் கடற்படையினர் பிடித்துச்சென்று விடுகிறார்கள். தமிழக மீனவர்களின் படகுகளையும் பறிமுதல் செய்துகொண்டு போய்விடுகிறார்கள். இதனால், தமிழக மீனவர்கள் பல இன்னல்களுக்கு ஆளாகிறார்கள். தொழில் செய்யமுடியாமல் தவிக்கிறார்கள். தமிழக மீனவர்கள்- சர்வதேசக் கடல் எல்லையைத் தாண்டாமல், இந்திய கடல் எல்லைக்குள்ளேயே மீன்பிடிக்க வசதியாக - ஒளிதரும் மிதவை விளக்குகள் நிறுவவும் திட்டம் உருவாக்கப்பட்டது.

இந்த திட்டத்தின்படி - சூரிய சக்தியினால் இயங்கும் ஒளிரும் மிதவை விளக்குகள் கடலில் சர்வதேச எல்லையில் 5 கிலோ மீற்றருக்கு ஒன்று வீதம், 250 கிலோ மீற்றர் தொலைவிற்கு இந்திய கடல் எல்லையில் மிதக்கவிடப்படும். ரூ.3 கோடியே 40 லட்சம் இதற்குச் செலவாகும். இந்த ஒளிரும் மிதவை விளக்குகள் - பகலில் சூரிய சக்தியில் இருந்து மின்சாரத்தை எடுத்து விளக்கை எரியச்செய்யும். அது இரவிலும் எரியும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், அந்த விளக்கிருக்கும் இடத்தைப் பார்த்து, அதற்கு அப்பால் செல்லாது மீனவர்கள் தங்கள் மீன்பிடித் தொழிலை செய்துகொண்டுவரலாம்.

இந்தத் திட்டம் மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இது மத்திய அரசின் பாதுகாப்புத்துறை, தேசிய கடற்தொழில்நுட்பத்துறை, கடலோரப் பாதுகாப்புப்படை ஆகியவற்றின் ஒத்துழைப்போடும் நிறைவேற்றவேண்டிய திட்டமாகும்.

இந்தத் துறைகளின் அனுமதியைப்பெற்று, அதன் பிறகு இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

ஆன்சலின்

# ஐம்பத்தேழாவது சுதந்திர தினமும் பதின்மூன்றாவது பொதுத் தேர்தலும்...!



சுதந்திர தாகத்தோடு...

இலங்கையின் சுதந்திரதின நிகழ்வுகள் நடந்துமுடிந்து ஒருவாரமாகியும்விட்டது. அரசியல் ரீதியில் பல்வேறு குழப்பங்கள் நிலவிய போதிலும் சுதந்திரதினக் கொண்டாட்டங்கள் சிறப்பாக நடந்தேறியுள்ளன.

பீரங்கி கவசவாகனங்கள், டாங்கிகள், ஆட்லறிகள், பல்குழல் ஏவுகணைகள் என இறக்குமதி செய்யப்பட்ட நவீன ஆயுதக் கண்காட்சி, முப்படைகளின் அணிவகுப்பு என சுதந்திர தினம் கொண்டாடப்பட்டமை பல்வேறு செய்திகளைத் தந்தன.

இராணுவ ரீதியில் கொழும்பில் பலத்த பாதுகாப்பு ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தன என்ற தகவலையும் அது தந்தது.

வழமையான சுதந்திர தினச் செய்தியுடன், சமாதானத்திற்கான ஆருடங்களும், ஆலோசனைகளும் அள்ளித் தெளிக்கப்பட்டன.

தென்னிலங்கை அரசியல் சக்திகளான பௌத்த பிக்குகள், சிஹல உறுமய, ஜே.வி.பி. போன்றவர்களுக்கு இந்த அணிவகுப்புக்கள் இனவெறி உணர்வை ஊட்டும் மருந்தாய் அமைந்திருக்கலாம்.

ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் முன்னின்று நடத்திமுடித்த சுதந்திர தினக் கண்காட்சி வைபவங்கள் யுத்தத்தின் மேல் நம்பிக்கையை ஊட்டியிருக்கலாம். பகலிலேயே கனவு கண்டு பழக்கப்பட்டவர்களுக்கு இவ்வாறான நம்பிக்கை உதித்தமை வியப்பளிக்கும் விடயமாக இருக்க முடியாது.

சுதந்திர தினத்தன்று தென்னிலங்கையில் பட்டொளி வீசிப்பறந்தது இலங்கையின் தேசியக்கொடி. ஆனால், வடக்கு - கிழக்குப் பகுதிகளில் அவ்வாறு ஒளிவீச முடியாத நிலையே காணப்பட்டது.

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் வாழ்கின்ற மக்கள் தமது வாழ்க்கைக்காக ஏங்குகின்ற ஒரு நிலையே காணப்படுகிறது. அவர்கள் சுதந்திர தினத்தைச் சிறப்பாகக் கொண்டாடவில்லை. தேசியக் கொடிகள் சில இடங்களில் பறக்கவிடப்பட்டபோது அவை மக்களால் அறுக்கப்பட்டன. அறுக்கப்பட்ட கொடிகள் எரியூட்டி அழிக்கப்பட்டன.

சுதந்திரதினத்தன்று மக்கள் கறுப்புக் கொடிகளை ஏற்றி தமது எதிர்ப்பினைத் தெரிவித்த சம்பவங்களும் நடைபெற்றுள்ளன.

புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டு இரண்டு வருடங்கள் முடிவடைந்த நிலையில் உடன்படிக்கையில் கொடுக்கப்பட்ட விடயங்கள் இன்னமும் நிறைவுசெய்யப்படாத ஒரு சூழ்நிலையே நிலவுகின்றது.

இரண்டு தரப்பாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் இன்னமும் தீர்க்க முடியாமல் பிரதமர் திண்டாடுகின்றார். பாதுகாப்புக் காரணங்களைக் காட்டி சொந்தவீடுகளுக்கு மக்கள் திரும்பமுடியாமலும், கடலிலும் வயல்களிலும் தமது தொழில்களைச் செய்யமுடியாமலும் உள்ளனர்.

உயிர் பாதுகாப்பு வலயம் என்ற பேரில் ஜனாதிபதி சந்திரிகாவின் ஆசீர்வாதத்துடன் மேற்கொள்ளப்படும் மனித உரிமை மீறல் சம்பவங்கள் மக்கள் மத்தியில் பெரும் அவலத்தைத் தோற்றுவித்திருக்கின்றன. அதன் காரணமாகத்தான் சுதந்திர தினத்தை கரிநாளாகக் கொண்டாடும் தீர்மானத்தை மக்கள் எடுத்திருக்கின்றார்கள்.

சமாதானம் என்ற போர்வையை அணிந்துகொண்டு அரசியல் நடத்த விரும்புகின்றவர் ஜனாதிபதி. இந்த விருப்பம் பிரதமர் ரணிலின் அரசியல் தந்திரங்களால் சர்வதேசத்திற்கு அம்பலப்படுத்தப்பட்டுவிட்டன.

சமாதான நகர்வை இரண்டு ஆண்டுகளாகக்கொண்டு சென்ற சாதனையைத் தவிர உருப்படியான செயலை யாருமே செய்யவில்லை. அது ரணில் அரசாக இருந்தாலும் சரி, ஜனாதிபதி சந்திரிகா ஆனாலும் சரி இருவருக்கும் இது பொருந்துகின்ற வகையில் அமைந்துள்ளது.

அரசியல் கட்சிகளுக்கிடையில் மாறிமாறிக் குழிபறிப்புக்கள் நிகழ்ந்தன, நிகழ்ந்து வருகின்றன. சொந்த அரசியல் நலன்கள் பேணப்பட்டு வந்துள்ளன.

சுதந்திர தினத்தையும் இதற்கே அவர்கள் பயன்படுத்தியுள்ளனர். இலங்கைக்குள்ளேயே இருக்கும் இன்னொரு இனத்தை அவமதிக்கும் காரியங்களைச் செய்துவந்துள்ளனர். சொல்லிலும் செயலிலும் சுதந்திரத்தை பிற இனங்களுக்கு பகிர்ந்தளிக்க முன்வர இவர்கள் தயாரில்லை. சிங்கள இனவாதமும், அதன் முகவர்களான அரசியல் கட்சிகளும் இராணுவ ஒடுக்குமுறையுடன் கூடிய வகையில சுதந்திர தினத்தைக் கொண்டாடியுள்ளனர். அவர்களது நடவடிக்கைகளால் சுதந்திரத்தின் உண்மைத் தன்மையை கவலைக்குள்ளாக்கியிருக்கின்றார்கள்.

சுதந்திர தினத்தில் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, மன்னார், யாழ்ப்பாணம் என வடக்கு - கிழக்குப் பகுதிகளில் மக்கள் எழுச்சிப் போராட்டங்களை நடத்தியுள்ளனர். இதன்மூலம் இன்னொரு உண்மையை சர்வதேசத்துக்கு வெளிக்காட்டியுள்ளனர்.

வீதிகளில் வாகனங்கள் ஓடவில்லை. பாடசாலைகள், வணிக நிறுவனங்கள், சந்தைகள், அரச அலுவலகங்கள் இயங்கவில்லை. வீதியெங்கிலும் கறுப்புக்கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. கண்டன ஊர்வலங்கள், உண்ணாவிரதப் போராட்டங்கள் என சுதந்திர தினத்தை வடக்கு - கிழக்குப் பகுதி மக்கள் வரவேற்ற விதம் இவ்வாறு அமைந்தது.

அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களின் சுதந்திர தாகத்தை மீண்டும் ஒருமுறை கிளறியிருக்கின்றன. இந்த நிகழ்வுகள் - சிங்கள சக்திகள் தீர்வில் அக்கறையின்றி செயற்படும் தன்மையை எடுத்துக்காட்டியுள்ளன.

இந்த நிலையில் தற்போது நாடாளுமன்றமும் கலைக்கப்பட்டுவிட்டது. மனோமலிக் குழுவின் முயற்சிகளும் பயனற்றுப்போய்விட்டன. ஜே.வி.பி. - சுதந்திரக் கட்சி கூட்டின் அதிகார வெறியின் வெற்றியாக இன்றைய அரசியல் நகர்வுகள் சென்றுகொண்டிருக்கின்றன.

அமைதி முயற்சிகள் செய்வோருக்கு இந்த நாட்டில் ஆபத்துக்கள் ஏற்படும் என்றநிலை தோன்றிவிட்டது!. சமாதானம் என்று கூறிக்கொண்டு ஆட்சிக்கு வந்தார் ரணில் விக்கிரமசிங்க. அவரின் சமாதானம் தமிழர்களின் துன்பங்களை அதிகரிப்பதாகவே அமைந்துவிட்டது.

தமிழர்கள் அகதிகளாய் - நலன்புரி நிலையங்கள், அகதி முகாம்களில் வாழ்கின்ற நிலை தொடர்கின்றது. இந்து வேதனைகளைத் தாங்கி உயிர்வாழும் தமிழர்களுக்கு வேதனையை அதிகரிக்கும் நடவடிக்கை போன்று சிலசம்பவங்களும் நடந்துள்ளன.

ஏ - 9 பாதை வழியாக வருகின்ற பேரினவாதிகள் கண்களுக்கு யுத்த அழிவுகளும், தமிழ் மக்களின் அகதி வாழ்வும் காட்சிப் பொருளாகிவிட்டன. உல்லாசப் பயணங்கள் செய்துகொண்டு வருகின்ற பேரினவாதிகள், உரிமையிழந்து தவிக்கும் தமிழர்கள் - இதுதான் இலங்கையின் தற்போதைய ஆட்சியின் வடிவம்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சமாதானத்தின்மீது காட்டிய ஆர்வம் பற்றியும் கூறத்தான்வேண்டும். மத்தியஸ்தம் புரியவந்த நோர்வே அரசின் பிரதிநிதிகளை புலிச்சாயம் பூசி விலக்கிவிட முயன்றார். அதில் அம்மணி வெற்றியும் கண்டார்.

நிராயுதபாணிகளாய் வந்த போராளிகளை கடற்பரப்பில் பலிவாங்கியுள்ளார். இது அம்மணி சமாதானத்துக்குக் கொடுத்த பலி என்று கூடச் சொல்லிக்கொள்ளலாம்.

திருகோணமலையைச்சுற்றி விடுதலைப் புலிகள் முகாம்கள் அமைத்துள்ளனர். இதனால், இந்தியாவின் எண்ணெய்க் குதங்களுக்கு ஆபத்து நேரிடலாம் என்று கதிர்காமர் இந்தியாவைத் தூண்டிவிட்டார்.

இந்தியா, அமெரிக்கா, பிரிட்டன் எனப் பல்வேறு நாடுகளுக்கும் சென்று இராணுவ ஒப்பந்தங்களைக் கொண்டுவர முயன்றார் ஜனாதிபதி.



யுத்த எதிர்பார்ப்போடு...

உள்துறை, ஊடகஅமைச்சு, பாதுகாப்பு அமைச்சு என முக்கிய அமைச்சுப் பதவிகளை, பிரதமர் ரணில் அமெரிக்காவுக்குச் சென்றவுடன் பறித்துக்கொண்டார் ஜனாதிபதி.

தான் ஒருவார்த்தை சொன்னால் போதும் சமாதான ஒப்பந்தம் பயனற்றுப்போய்விடும் என்று ஒருபக்கம் ரணிலை விரட்டிக்கொண்டிருந்தார். மறு பக்கத்தில் தன்னுடைய கணவனைக் கொலை செய்த செயலையும் மறந்து ஜே.வி.பியுடன் கூட்டு வைத்துக்கொண்டார்.

கடவுச்சீட்டு இன்றிப் படகில் தப்பியோடிய ஜே.வி.பியின் தலைவர் சோமவன்சவை விமானம் மூலம் கொழும்பு வர பாதுகாப்புக் கொடுத்தார். பாதுகாப்பு அமைச்சை தன் கையில் பொறுப்பேற்றது இதற்காகக்கூட இருக்கலாம்.

இவ்வாறுதான் ஜனாதிபதி இரண்டு ஆண்டுகளாய் சமாதானத்துக்கு உழைத்த உழைப்புக்கள் அமைந்துள்ளன.

சமாதானத்துக்கான உழைப்புக்கள் எந்தவகையில் பயன்களை கொடுத்திருக்கின்றது என்பது குறிப்பிடப்படவேண்டிய ஒன்றாகும்.

தேர்தல் ஒன்றுக்கான களமாக விரிந்துள்ளது. அரசியல் கட்சிகள் தமது பிரசாரங்களுக்கு உரிய கருப்பொருளாக அமைந்துள்ளது. ஒரே கதிரையில் இருந்வர்களுக்கு மீண்டும் அதே கதிரையில் இருப்பதற்குரிய வகையைச் செய்துகொள்வதற்கு வழிகாட்டியுள்ளது.

மக்களின் உண்மையான தேவைகள் எதுவென்பதுபற்றிச் சிந்திக்க எவருமே தயாராக இல்லை. சமாதான நகர்வை ஆளும் தரப்பு சாதகமாகப் பயன்படுத்துகின்றது. மறு தரப்பு இதனை விளங்கிக்கொண்டு அவசரமாய் செயலாற்றியுள்ளது.

உதிரிக் கட்சிகளின் நிலையைக் பொறுத்தவரையில் தாயைக் கொலை செய்தவன் கதிரை போட்டாலும் அதில் இருப்பதற்குத் தயார் என்ற நிலையில் உள்ளன. ஒட்டுண்ணிகளாய் இருக்க இடம் கிடைத்தால் போதும் என்ற நிலை அவர்களுக்கு உள்ளது.

தமிழர் தரப்பில் நல்லதொரு மாற்றம் தெரிகின்றது. ஏகப் பிரதிநிதிகள் குரல்களை ஒலிக்கவேண்டும் என்ற சிந்தனை தோன்றியுள்ளது. தமிழர்களுக்கு இது ஒரு நல்ல ஆரம்பமாகவே படுகின்றது.

எதிர்வரும் நாட்களில் கதிரைப் போட்டிகள் மெல்ல மெல்ல நாட்டை அதிரச்செய்யப்போகின்றன. இந்த அதிர்வேட்டுக்களால் பாதிக்கப்படப் போவது மக்கள் வாழ்க்கைதான்.

இந்த நிலையில் மக்கள் விழிப்புடன் இருக்கவேண்டியது அவசியமானது. அவ்வாறு இருந்தால்தான் கதிர் அறுக்கப் புறப்பட்டுள்ள திருடர்களின் கத்திகளுக்குத் தப்ப முடியும்.

இல்லையேல் விதைத்தவர்கள் வைக்கோலை மட்டுமே அறுவடை செய்யும் சூழல் உருவாகும். இந்த நிலையில் சந்தர்ப்பவாதிகளின் சரித்திரங்களை முடிவுக்குக்கொண்டு வந்து உண்மையான சுதந்திரத்தையும் விடுதலையையும் பெற்றுக்கொள்ள மக்கள் உழைக்கவேண்டிய தேவையுள்ளது. ☆

## சம காலம்... ஒரு கவிதை நோக்கு



### அரசியல்

திமிரேற்றி
மேலாடை உடையாக
போர்க்கவும்
கழட்டிவிடவும்
இருப்பிடம் இல்லாமல்
எல்லோரிடமும்
தங்கி வருகின்றது!

கண் மூடி நகர்ந்தால்
பல அடிகள்
விழித்திருக்க
இரவும் இடம்கொடுக்கும்!

எல்லாம் செய்தவை
ஆனால்
பூர்த்திசெய்யாத விண்ணப்பம்
அதற்குள்
பாராட்டுக்கள்
பத்திரிகைகளில் விளம்பரம்
இனிமேல்
சொல்ல வார்த்தையில்லை
நிறைவேற்றுவார்கள் என்று!

கிடைத்த இடம்
ஏன் தெரிவு செய்தார்கள்
மாறிய முகத்தால்
நாங்கள்
தொலைந்த முகவரிகள்

ஊரில்
எல்லோருக்கும் தெரியும்
அமைச்சரை
கோழிகூட கொக்கரிக்கும்
பழுதான நிவாரண அரிசி
ஒவ்வொரு நாளும்
தீனியாக கோழிக்கும்!

ஓட்டைப் பானை
அரிசி...
அடிக்கடி அணைந்த
அடுப்பு
ஒருநாள்
ஒரு தடவைதான்
ஒரு மணிக்குச் சாப்பாடு!

நிழல் படத்தில்
நான் மட்டும்
வாங்கிய பொருளுடன்
வழங்கியவருக்காக
எடுக்கப்பட்டது!

– செல்வம்

# நாடாளுமன்ற கலைப்பின் எதிரொலி வொஷிங்டன் மாநாடு ரத்தாகும்?

(கொழும்பு)

வொசிங்டனில் எதிர்வரும் 17 ஆம திகதி நடைபெறவுள்ள இலங்கைக்கான மறுசீரமைப்பு நிதி உதவி வழங்கும் மாநாடும் ரத்து செய்யப்படக்கூடும் என்று தெரியவருகிறது.

டோக்கியோவில் 2003 ஆம் ஆண்டு ஜூன் மாதம் நடைபெற்ற சர்வதேச நிதி உதவி வழங்கும் மாநாட்டில் இலங்கையின் மறுசீரமைப்புப் பணிகளுக்காக 4.5 பில்லியன் அமெரிக்க டொலர் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பான ஆய்வுக் கூட்டம் எதிர்வரும் 17 ஆம் திகதி வொஷிங்டனில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான், நோர்வே உள்ளிட்ட 49 நாடுகள் பங்கேற்க உள்ளன.

தற்போது இலங்கையின் நாடாளுமன்றத்தை ஜனாதிபதி சந்திரிகா கலைத்துவிட்டதால் இந்தக் கூட்டம் நடைபெறுமா என்ற ஐயம் எழுந்துள்ளது.

திட்டமிட்டபடி நிதி உதவி வழங்கும் மாநாடு நடைபெறும் என்று அமெரிக்க துணைச் செயலர் ஆர்மிடேஜ் உறுதி செய்துள்ளதாக கொழும்பில் உள்ள அமெரிக்கா தூதரக செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

இருப்பினும் இத்தகைய கூட்டம் நடைபெறுவதற்கு உகந்த சூழல் இல்லையெனவும், கூட்டம் ரத்து செய்யப்படக் கூடும் என்ற கருத்தும் நிலவி வருகிறது. அமைதிச் செயலகத்தின் ஆலோசகரான நந்தா கொட்டகே இக்கூட்டம் குறித்து குறித்து கூறுகையில் -

தற்போதைய இலங்கை அரசியல் சூழ்நிலையில் கூட்டத்தை ரத்து செய்துவிட்டு அரசியல் நிலைமைகள் சீரடைந்த பின்பு நடத்துவதே சரியானதாக இருக்கக் கூடும் என்று கூறியுள்ளார்.

நிலையற்ற அரசியல் நீடிக்கும் தற்போதைய சூழலில் நிதிஉதவி வழங்குநர் கூட்டம் எவ்வித பயனுமற்றதாக இருக்கும் என்பதால் தேர்தல் முடிவடைந்த பின்பு அக் கூட்டத்தை நடத்தலாம் என்றும் அவர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம்.



## ஆப்கானின் தென்கிழக்குப் பகுதியில் புலனாய்வு அதிகாரி சுட்டுக்கொலை!



(காபூல்)

ஆப்கானிஸ்தானின் தென்கிழக்குப் பிரதேசத்தில் உதவிப் புலனாய்வுத்துறை அதிகாரியாகப் பணிபுரிந்த மொகமட் குசா - நேற்று தனது வேலைத்தளத்திற்குச் சென்று கொண்டிருந்தவேளையில் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

இவரது மரணம் தொடர்பாகப் பலவிதமான கருத்துக்கள் தெரிவிக்கப்படுகின்றன. தற்தொலைக் குண்டுதாரியொருவர் இவரை சுட்டுக்கொன்றபின்னர் தன்னைதானே வெடித்துச்சிதறச் செய்ததாக ரொய்ட்டர் தெரிவித்தது. இதேநேரத்தில் குண்டுத்தாக்குதலிலேயே இவர் கொல்லப்பட்டதாக ஏ.எப்.பி செய்திஸ்தாபனம் தெரிவித்தது.

உலக நோக்கு

# ஈராக்கில் கார்க்குண்டுத் தாக்குதல்; 36 பேர் பலி! 18 பேர் படுகாயம்!!





பாக்தாத்தின் மத்திய பகுதியில் நேற்று நடைபெற்ற கார்க்குண்டு வெடிப்பில் 36 ஈராக்கியர்கள் கொல்லப்பட்டுள்ளதாக அமெரிக்கப் படையின் பேச்சாளர் தெரிவித்தார்.

படைமுகாமொன்றின்முன் ஈராக்கியப் படையில் இணைந்துகொள்வதற்காகக் காத்திருந்தவர்களே கொல்லப்பட்டுள்ளதாகவும், 300 இற்கு மேற்பட்ட ஈராக்கியர்கள் முகாமிற்கு வெளியே தங்கியிருந்த வேளையில் இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளதெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

300 இலிருந்து 500 இறாத்தல் நிறைகொண்ட வெடிபொருட்கள் இந்தத் தாக்குதலுக்கு உபயோகிக்கப்பட்டதென இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இஸ்லாமியத் தீவிரவாதிகள் - அமெரிக்கக் கூட்டுப்படையுடன் தொடர்புகளை வைத்திருப்பவர்களுக்கு எதிராக எச்சரிக்கை மேற்கொண்டுவருவதாகவும், இதன் விளைவாகக் கூடுதலான தாக்குதல்கள் நடைபெறுவதாகவும், இவ்விதமான எச்சரிக்கையின் பின்னர் இதுவரை 9 கார்க்குண்டுத் தாக்குதல்கள் நடைபெற்றுள்ளதாக இராணுவ அதிகாரி மேலும் தெரிவித்தார்.

இவ்வருடம் ஜூன் மாதம் 30 ஆம் திகதி ஈராக்கியர்களிடம் ஆளும் அதிகாரத்தைக் கையளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளவேளையில் அங்கு தாக்குதல்கள் அதிகரித்துவருவது குறிப்பிடத்தக்கது.

## தாய்வானை சுதந்திர நாடாக்க அடுத்த ஆண்டு கருத்துக்கணிப்பு

தாய்வானை சுதந்திரமான ஒரு நாடாகப் பிரகடனப்படுத்துவதற்கு அடுத்த ஆண்டு மக்கள் கருத்துக் கணிப்பொன்றை மேற்கொள்வதற்கு அந்த நாட்டின் ஜனாதிபதி சென் சூய் பியான் திட்டமிட்டுள்ளார்.

தாய்வானில் நடத்தப்படவுள்ள கருத்துக் கணிப்பு இரு நாடுகளுக்கிடையேயான உறவுகளைப் பாதிக்கலாமென சீனாவின் அரசாங்கப் பேச்சாளர் கருத்துத் தெரிவித்திருக்கிறார்.

தாய்வான் - சீனாவின் ஒரு பகுதியெனவும் இதனால் தமது நாட்டுடன் இணக்கப்படவேண்டுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதனிடையே தாய்வானால் மேற்கொள்ளப்படவுள்ள மக்கள் கருத்துக் கணிப்பிற்கான வாக்கெடுப்பு அந்தப் பிரதேசத்தின் சமநிலையைப் பாதிக்கலாமென சீனா, அமெரிக்கா ஆகிய நாடுகளும் கருத்துத் தெரிவித்திருக்கின்றன

சீனாவின் அச்சுறுத்தல்களிலிருந்து மக்களைக் காப்பாற்றுவதற்கு மேலதிக நிதியைச் செலவளித்தல், சீனாவின் தலைவர்களுடன் மீண்டும் பேச்சுக்களை ஆரம்பித்தல் தொடர்பாக மக்களின் கருத்துக்களை அறிந்து கொள்வதற்கும், தாய்வான் ஜனாதிபதி திட்டமிட்டுள்ளார்.

தாய்வானின் முன்னைய ஜனாதிபதி -தேர்தலில் சீனாவின 'சென்' னிற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட பிரசாரங்கள் அவரின் ஆதரவை மக்களிடையே அதிகரிக்கச் செய்ததாகத் தெரிவித்தார்.

## காணாமற்போன ரஷ்ய ஜனாதிபதி வேட்பாளர் 5 நாட்களின் பின்னர் மீளத் திரும்பினார்!



ரஷ்யாவில் ஜனாதிபதித் தேர்தலுக்குப் போட்டியிடுவற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தவரான இவான் றைப்கின் கடந்த ஐந்து நாட்களாகக் காணாமற்போனநிலையில் தேடப்பட்டு வந்தார்.

ஜனாதிபதி வேட்பாளர் போட்டியிலிருந்து விலக்குவதற்காக இவரைக் கடத்தியிருக்கலாம் அல்லது கொலை செய்திருக்கலாம் என்ற ஊகம் நிலவிவந்தது. இவான் தற்போதைய அதிபர் "புடினை" விமர்சித்து வந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

தனக்கு ஓய்வு தேவைப்பட்டதாகவும், அதனால் சிறிது காலம் கிவ் என்ற நகரில் நண்பர் ஒருவரை சந்திப்பதற்காகச் சென்றதாகவும், மற்றவர்கள் தன்னை அடையாளங்கண்டு கொள்ளதிருப்பதற்கு வேறு ஆடையில் உலாவியதாகவும் இவான் தெரிவித்திருக்கிறார்.

சென்றவார இறுதியில் ரஷ்யா முழுவதும் தேடப்பட்ட இந்த வேட்பாளர் - கொல்லப்பட்டிருக்கலாம் என்ற அடிப்படையில் மரண விசாரணை ஒன்றிற்கான ஆயத்தங்களும் செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## லிபிய வெளிநாட்டமைச்சர் பிரிட்டனுக்கு இருநாள் விஜயம்

லிபியாவின் வெளிநாட்டமைச்சர் மொகமட் அப்துல் ரஹ்மான் சல்கம் இருநாள் விஜயமொன்றை மேற்கொண்டு பிரித்தானியாவிற்குச் சென்றுள்ளார்.

30 ஆண்டுகளுக்குப்பின்னர் பிரித்தானியாவிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள லிபியத் தலைவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.


அண்மையில் அணுவாயுதங்கள் தொடர்பான உற்பத்திகளை நிறுத்தப்போவதாக லிபியா அறிவித்தபின்னர் சர்வதேச நாடுகளில் லிபியா தொடர்பாக நல்ல புரிந்துணர்வு ஏற்பட்டுள்ளதாக அவதானிகள் தெரிவித்தனர்.

இதனிடையே பிரித்தானிய வெளிநாட்டமைச்சர் யக்ஸ்ரோ - சல்கமை வரவேற்றுள்ளார்.

லிபிய வெளிநாட்டமைச்சரைச் சந்தித்தது தொடர்பாக கருத்து வெளியிட்ட யகஸ்ரோ -இரு நாடுகளுக்கிடையேயான தொடர்புகள் முன்னேற்றம் காண்பதற்கு இந்தச் சந்திப்பு ஒரு மைல்கல்லாக அமைந்துள்ளதாகத் தெரிவித்தார்.

இத்தாலியப் பிரதமர் சில்வியோ பேர்லுஷ்கோனி நேற்றுமுன்தினம் கடாபியைச் சந்திப்பதற்கு லிபியாவிற்கு விஜயம் மேற்கொண்டிருக்கிறார்.

## இஸ்ரேல் படையினர் தாக்குதல்; எட்டு பலஸ்தீனர்கள் உயிரிழப்பு!



காசா பிரதேசத்தில் நேற்று இஸ்ரேலியப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட திடீர்த் தாக்குதலில் ஒரு பொலிஸ் அதிகாரி உட்பட எட்டு பலஸ்தீனர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

காஸாவின் கிழக்குக் பகுதியில் இஸ்ரேலிய டாங்கிகள் பிரவேசிக்கமுற்பட்டவேளையில் துப்பாக்கிப் பிரயோகம் இருபகுதியினராலும் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

காஸா பிரதேசத்தில் அமைந்துள்ள யூதக் குடியிருப்புகள் மீது மோட்டார் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளதாகவும், அவற்றை நிறுத்துவதற்காகவே இந்தத் திடீர்த் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக பி.பி.ஸியின் செய்தியாளர் ஜேமக் ரொக்குகர் கருத்துத் தெரிவிக்கையில் -

இஸ்ரேலியப் பிரதமர் - காஸாவின் யூதக் குடியிருப்புக்களை அகற்றுவதற்கான சாத்தியங்களை ஆராய்ந்துவரும்வேளையில் இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளதாகத் தெரிவித்தார்.

இதனிடையே இந்தச் சம்பவத்தில் காயமடைந்தவர்களின் எண்ணிக்கை 18 ஆக உயர்ந்துள்ளதாகவும், அவர்களில் கமாஸின் ஆன்மீகத் தலைவர் ஷேக் அகமட் யசீமின் மெய்ப்பாதுகாவலர்களும் அடங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.




அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் ஜோன் எட்வாட் தனது ஆதரவாளர்கள் மத்தியில் பிரசாரத்தில் ஈடுபடும் காட்சி

## 12 தொகுதிகளில் வெற்றிபெற்றதன்மூலம் தனது நிலையைப் பலப்படுத்தினார் ஹெரி

அமெரிக்காவின் வோர்ஜியா ரென்னெசி ஆகிய தொகுதிகளில் ஏற்பட்ட வெற்றியுடன் ஜனநாயக முன்னணி வேட்பாளர் ஜோன் கெறி தனது நிலைகளைப் பலப்படுத்தியுள்ளதாகத் தெரிவித்தார். ஜோன் கெறி ஜனநாயகக் கட்சியின் சார்பில் போட்டியிட்டு 14 தொகுதிகளில் 12 இல் வெற்றிபெற்றுள்ளார்.

இவரின் வெற்றியின் விளைவாக வெல்கி கிளாக் போட்டியிலிருந்து விலகிக்கொள்வதற்குத் தீர்மானித்துள்ளார். வோர்ஜியாவின் தொகுதியில் உள்ள வாக்காளர் எண்ணிக்கையில் அரைப்பங்கிற்கு மேற்பட்டவர்கள் கெறிக்குச் சார்புடையவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தனது ஆதரவாளர்கள் மத்தியில் உரையாற்றும்போது அமெரிக்க மக்கள் மாற்றத்தை விரும்புவதாகக் கெறி தெரிவித்தார்.

நவம்பர் மாதம் நடைபெற ஏற்பாடாகியுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ரெனெசி மானிலம் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு மிகவும் முக்கியமான ஒரு தொகுதியாகும்.

1996 இல் பில் கிளின்டன் இந்த மாநிலத்தில் வெற்றிபெற்றிருந்தார். 2000 ஆம் ஆண்டில் தற்போதைய அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷும் இந்த மாநிலத்தில் வெற்றிபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

நமது ஈழநாடு
Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# உதயசூரியனின் கீழ் போட்டியிடுவதற்கு ஏனையகட்சிகள் தவிர்க்கப்படலாம்!

## ஆனந்தசங்கரி தெரிவிப்பு

உதயசூரியன் சின்னத்தின் கீழ் ஏனையகட்சிகள் இணைந்து போட்டியிடுவது தவிர்க்கப்படலாம் என தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்தார்.

பி.பி.சியின் தமிழோசைக்கு அவர் நேற்றிரவு அளித்த செவ்வியிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது.

கட்சித் தலைவர் என்ற வகையில் எனக்கு உள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி சில வரையறைகளை, கட்டுப்பாடுகளை விதிக்கமுடியும். என்னுடைய அனுமதியின்றி செயலாளர் நாயகமோ, வேறு யாரையினும் எந்தவொரு கட்சிச் செயற்பாட்டையும் மேற்கொள்ளமுடியாது.

கட்சியின் நன்மைக்காகவும் என்னுடைய கௌரவத்தைப் பாதுகாத்துக் கொள்ளவுமே நான் சிலரது செயற்பாடுகளைப்பற்றி அலட்டிக்கொள்வதில்லை. சம்பந்தன் உட்படச் சிலர்-சிலரது அச்சுறுத்தலுக்குப் பயந்து செயற்படுகின்றனர்.

அவர்களால் எடுக்கப்படும் எந்த முடிவும் என்னையும் கட்சியையும் கட்டுப்படுத்தாது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சின்னமானது சில வரையறைக்குட்பட்ட ரீதியிலேயே ஏனைய கட்சிகளை இணைத்துக் கொண்டு கடந்த பொதுத் தேர்தலில் போட்டியிட்டது. இம்முறை மேலும் சில கட்சிகள் தமிழ்தேசியக் கூட்டமைப்புடன் இணையவுள்ளதாகவும், தற்போது இணைந்திருக்கும் சில கட்சிகள் தமிழர் விடுதலைக் கூட்டணிக்குள் பிளவை ஏற்படுத்த முயற்சிப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் இனிவரும் தேர்தலில் உதயசூரியன் சின்னத்தின் கீழ் ஏனைய கட்சிகள் இணைந்து போட்டியிடுவதைத் தவிர்க்கலாம்.

எமது கட்சிக்குள் வீண்முரண்பாடுகள் தோற்றம் பெறுவதை நான் விரும்பவில்லை. நாலைந்து பேர் சில அச்சுறுத்தல்களுக்குப் பயந்து பூச்சாண்டி காட்டுகிறார்களே தவிர கட்சியில் பெரும்பாலானோரின் ஆதரவு எனக்கு உண்டு.

தமழீழ விடுதலைப் புலிகளுடன் தான் பேச்சுநடத்தவேண்டும் என்பதில் உறுதியாக உள்ளேன். மற்றும்படி எதையும் நான் அவர்களுக்கெதிராகக் கூறவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# அரசியல் கட்சிகளுக்கு இலவச அஞ்சல் சேவை!

எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடவுள்ள கட்சிகள், வாக்களார்களுடன் தொடர்புகொள்வதற்கான அஞ்சல் கட்டண நீக்கம் எதிர்வரும் 24 ஆம் திகதி முதல் அடுத்த மாதம் 24 ஆம் திகதிவரை அமுலில் இருக்குமென அறிவிக்கப்பட்டுள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளின் செயலாளர்கள் மற்றும் சுயேட்சை வேட்பாளர்களுக்குமே இந்த வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு கடிதமும் 30 கிராமிற்கு குறைவானதாகவும், தபால் சோதனையிடக்கூடியதாகவும் இருக்கவேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நாடாளுமன்றத் தேர்தலை ஒத்திவைத்து பரீட்சையை திட்டமிட்டபடி நடத்துங்கள்!

## பெற்றோர், மாணவர்கள் வேண்டுகோள்

(கொழும்பு)

நாடாளுமன்றக் கலைப்பின் மூலம் ஏற்பட்டுள்ள அரசியல் குழப்ப நிலையல், எதுவும் அறியா அப்பாவிகளான க.பொ.த. சாதாரணதர மற்றும் உயர்தர மாணவர்களே அதிகம் பாதிக்கப்பட்டிருப்பதாக பெற்றோர் விசனம் வெளியிட்டுள்ளனர்.

ஏப்ரலில் நடைபெறவுள்ள க.பொ.த உயர்தரப் பரீட் சைக்கான திகதி இன்னும் சரியாக அறிவிக்கப்படாத நிலையில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் மிகவும் குழம்பிய நிலையில் உள்ளனர்.

இது தொடர்பாக கல்வி அமைச்சின் அதிகாரி தெரிவிக்கையில் -

ஏப்ரல் இரண்டாம் திகதி நாடாளுமன்றத் தேர்தல் என அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் மனங்கள் மட்டும் குழம்பவில்லை. அவர்களது பெற்றோரும் குழம்பிய நிலையில் உள்ளனர்.

பொதுத் தேர்தல் ஏப்ரல் இரண்டாம் திகதி நடந்து முடிந்த பின்னர் ஏப்ரல் 22 ஆம் திகதி வடமேல் மாகாணசபைக்கான தேர்தல் நடைபெறவுள்ளது. எனவே இவற்றின் மூலம உயர்தரப் பரீட்சைக்கான நேர அட்டவணையைத் தயாரிப்பதில் நாம் மிகவும் சிக்கலை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

இவ்வாறு பரீட்சை தாமதம் அடைந்தால் பரீட்சைப் பெறுபேறுகளும் தாமதம் அடையும்.

அரசியல் குழப்பநிலை தொடர்வதால் ஒக்ரோபர் மாதம் பல்கலைக் கழகங்களுக்குச் செல்லவேண்டிய மாணவர்கள் நவம்பர் மாதமே செல்லவேண்டியிருக்கும். பரீட்சையை ஒத்திவைக்கவேண்டாமென நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் பெற்றோர் எம்மைக் கேட்ட வண்ணமுள்ளனர்.

இதேவேளை - ஜனாதிபதி சந்திரிகாவிடம் உயர்தரப் பரீட்சையை ஒத்திவைக்கவேண்டாமெனவும் பொதுத்தேர்தலை ஒத்திவைக்குமாறும் பெற்றோர் நேற்று வேண்டுகோள் விடுத்தனர்.

அததுடன் மாத்தளையைச் சேர்ந்த சுதந்திர மாணவர் முன்னணி பரீட்சையை ஒத்திவைக்க வேண்டாமென கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கிற்கு கடிதம் எழுதியுள்ளது.

பரீட்சை ஒத்திவைப்பினால், பல்கலைக்கு தெரிவாகும் மாணவர்கள் மிகவும் நீண்ட காலத்திற்குக் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்படும்.

இந்தக் கடிதத்தை எழுதியதையிட்டு, நாம் மிகவும் கவலை அடைகின்றோம். ஏனெனில், நாடாளுமன்றைக் கலைத்து ஏப்ரல் இரண்டாம திகதியை தேர்தல் திகதியாக அறிவித்த ஜனாதிபதி அந்தத் திகதியில் நடைபெறவிருந்த உயர்தரப் பரீட்சையை கவனத்தில் எடுக்காததனால் ஆகும்.

பரீட்சையை ஒத்திவைக்காமல் தேர்தலை ஒத்திவைக்குமாறு ஜனாதிபதி சந்திரிகா, பிரதமர் ரணில் ஆகியோருடன் கல்வி அமைச்சரை கோருமாறும் இந்த கடிதத்தில் அந்த மாணவர் முன்னணி கேட்டுள்ளது.

## தமிழ்த்தேசிய...

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களிலேயே இவ்வாறு முஸ்லிம் பிரதிநிதிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடவுள்ளதாகவும், இதற்கான ஏற்பாட்டில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும், முஸ்லிம் தரப்பு பிரதிநிதிகளும் இணைந்து செயற்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# கிணற்றில் வீழ்ந்து குழந்தை உயிரிழப்பு!

(யாழ்ப்பாணம்)

கிணற்றுக்குள் தவறிவீழ்ந்த இரண்டு வயதுக் குழந்தை பரிதாபகரமாக உயிரிழந்தது.

இந்தச் சம்பவம் நேற்று மாலை 5 மணி யளவில் வேலணையில் இடம்பெற்றது.

வீட்டில் விளையாடிக் கொண்டிருந்த சமயமே கிணற்றுக்குள் வீழ்ந்து இந்தக் குழந்தை மரணமடைந்தது.

வேலணையைச் சேர்ந்த யசோதரன் கிறிஸ்னா (வயது 2) என்ற குழந்தையே உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

## யால...

8 ஆம் திகதி சரணாலயத்தின் இரண்டாம் பிரிவுக்குச் சென்ற இவர்கள், நான்கு நாட்களாக வீடு திரும்பவில்லை.

இதையடுத்து இந்தப் பகுதியில் படையினர் உஷார்நிலையில் வைக்கப்பட்டிருப்பதுடன் தேடுதல் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திஸ்ஸமகராம பொலிஸார் இது குறித்து விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

## சாவகச்சேரி...

யாளர்களிடம் படையினரால் கையளிக்கப்பட்டதென, ஈ.பி.டி.பி வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவித்திருந்தது.

ஆனால், இந்த வீடுகள் கையளிப்பு விடயத்தில் ஈ.பி.டி.பி சம்மந்தப்பட்டிருப்பதாக அந்தக் கட்சியிடம் இருந்து எந்த ஒரு தகவலையும் படையினர் பெறவில்லையெனவும் இராணுவப் பேச்சாளர் கேணல் சுமேத பெரேரா மறுத்துள்ளார்.

## தபால் மூலம்...

இந்தத் தபால் மூலம் வாக்களிப்பதற்கான உரிமை வழங்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

மாவட்ட தேர்தல் திணைக்களத்தில் உரிய படிவங்களைப் பெற்று, அவற்றை விண்ணப்பிக்குமாறும் வாக்காளர்பதிவுகளை மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்கள், கிராம உத்தியோகத்தர் அலுவலகங்கள் போன்றவற்றில் பார்வையிட முடியுமெனவும் தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார்.

## அத்துருகிரிய...

நடவடிக்கை எடுக்குமாறு உயர் நீதிமன்றம் சிபார்சு செய்துள்ளது.

இதனடிப்படையிலேயே பொலிஸ் சேவை ஆணைக்குழு நேற்றுமுன்தினம் உடுகம்பொலவை கட்டாய லீவில் செல்லும் பணிப்பை பொலிஸ் மா அதிபர் இந்திர டி சில்வாவுக்கு அனுப்பிவைத்தது.

## மக்களால்....

இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றிய அமைச்சர் ரவி கருணாநாயக்க, பொதுஜன ஐக்கிய முன்னணியில் இருந்த முக்கியமானவர்கள், ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் பொதுத் தேர்தலில் போட்டியிடவுள்ளனர் எனத் தெரிவித்தார்.

# தேர்தலை எவ்வாறு எதிர்கொள்வது; இ.தொ.கா. ஆலோசிக்கின்றதாம்!

## யோகராஜன் தெரிவிப்பு

எதிர்வரும் பொதுத்தேர்தலில் எவ்வாறு போட்டியிடுவது என்பது குறித்து தாம் ஆலோசித்து வருவதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உபதலைவர் ஆர்.யோகராஜன் தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் -

ஐக்கிய தேசியக் கட்சியுடனேயே இது தொடர்பாகப் பேசியுள்ளோம். வேறு எந்தக் கட்சிகளுடனும் நாம் பேரம்பேசவில்லை.

மலையக மக்களின் கல்வி வசதி, வீட்டு வசதி, வீட்டு உரிமை, அரசாங்க வேலை வாய்ப்பு விடயத்தில் மலையக மக்களுக்கு வாய்ப்பளிக்கப்படுதல் உள்ளிட்ட மூன்று விடயங்களை அடிப்படையாகக் கொண்டே ஐக்கிய தேசியக் கட்சியுடன் நாம் பேசிவருகின்றோம்.

ஐக்கிய தேசியக் கட்சி, மீண்டும் ஆட்சிக்கு வரும் என்ற நம்பிக்கை இருப்பதால், நாம் அந்தக் கட்சியுடனேயே தொடர்ந்தும் கூட்டு வைத்திருப்போம்.

மலையக மக்கள் முன்னணியின் தலைவர் மீது நம்பிக்கையீனம் தோன்றியுள்ளதனாலேயே நாம் அவருடன் இணையவில்லை. ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் புத்திரசிகாமணியை எமது கட்சியின் யாப்பு விதிகளுக்கு அமைவாகவும் உடன் அமுலுக்கு வரும் வகையிலும் நிர்வாக செயலாளராக நியமித்துள்ளோம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# வடமராட்சி கடலில்..

மீன்பிடித் தொழிலில் ஈடுபட்ட இந்திய மீனவர்களை சக்கோட்டை, இன்பருட்டி மீனவர்கள் சுற்றி வளைத்து பிடித்து கரைக்கு கொண்டு வந்தனர். இதன்போது கரையில் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்ட படையினர் தடுத்துநிறுத்தினர். இதன்போது படையினருக்கும் மக்களுக்குமிடையே வாக்குவாதம் ஏற்பட்டது. இதன்போது நான்கு மீனவர்களைப் படையினர் தாக்கினர்.

பின்னர் சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸாரிடம் 11 இந்திய மீனவர்களும் ஒப்படைக்கப்பட்டனர். இதனைத் தொடர்ந்து நான்கிற்கு மேற்பட்ட படகுகள் கடலில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. கைதுசெய்யப்பட் மீனவர்கள் 11 பேரும் தமிழ்நாடு நாகபட்டிணத்தைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

(202)

# 39 அமைச்சர்களின்...

அமைச்சர்களின் செயலாளர்கள் மற்றும் அந்தரங்கச் செயலாளர்களின் பதவிகள் என்பன நீக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த அறிவித்தலின்படி ஜனாதிபதி தலைமையிலான காபந்து அரசாங்கத்தில் பிரதமர் உட்பட 33 அமைச்சர்கள் அமைச்சரவையில் இடம்பெற்றுள்ளனர். இதில் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ள டி.எம். ஜெயரத்ன, லக்ஷ்மன் கதிர்காமர் ஆகியோரும் இடம்பெற்றுள்ளனர்.

# வொஷிங்ரன் மாநாடு...

டில், ஜப்பானின் விஷேட தூதுவர் யசுஷி அகாஷி, நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன், ஐரோப்பிய யூனியனின் பதில் பணிப்பாளர் ஜோஜீன் மற்றும் அமெரிக்காவுக்கான ஜரிஷ் தூதுவர் நோல் பாகி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இலங்கையில் ஏப்ரல் மாதம் நடைபெறும் தேர்தல் நீதியானதாகவும், நேர்மையானதாகவும் நடைபெற வேண்டுமெனவும், தேர்தலுக்கு பின்னர் சமாதான முயற்சியில் புதிய அரசாங்கம் ஈடுபடவேண்டுமெனவும், இந்தக் கூட்டத்தில் இந்த நாடுகளால் இலங்கையிடம் கேட்கப்படவுள்ளது. (முன்னர் வந்த செய்தி உள்ளே)

# மத்திய குழுவைக்...

பினர்களின் வேட்பு மனுவை கூட்டணித் தலைவரின் கூட்டமில்லாமல் செயலாளர் தயாரிக்க முடியாதெனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, வேட்பு மனுத்தாக்கல் செய்யும் திகதி இந்தமாதம் 17 ஆம் திகதி தொடக்கம் 24 வரையாகும். ஆனால், தடையுத்தரவு மார்ச் 16 வரையாகும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கூட்டணியின் சின்னத்தில் போட்டியிட முடிவெடுத்திருந்தனர். தற்போதைய தடையுத்தரவினால் மாற்றுவழியையே அவர்கள் எடுக்கவேண்டுமென சட்ட வல்லுனர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, உபதலைவர் ஜோசப் பரராஜசிங்கம் மற்றும் கட்சியின் செயலாளர் சம்பந்தன் இருவரும் இந்தவிடயம் தொடர்பாக சட்ட அறிஞர்களுடன் நேற்றுமாலை கலந்துரையாடல் ஒன்றை நடத்தினர்.

இந்த விடயம் சாதகமான ரீதியில் தீர்வு ஏற்படலாமெனறும் ஜோசப் பரராஜசிங்கம் மேலும் தெரிவித்தார்.

கூட்டணித் தலைவர் ஆனந்தசங்கரி தலைமையில் இந்தமாதம் முதலாம் திகதி நடக்கவிருந்த மத்திய குழுக்கூட்டம், நீதிமன்றத் தடையுத்தரவையடுத்து இந்த மாதம 22 ஆம் திகதி நடைபெறுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

# அமைச்சர் மிலிந்த...

வொரு காரியத்தையும் நிகழ்த்த முடியாது எனத் தெரிவித்தே, அவர் தமது பதவி விலகல் கடிதத்தை சமர்ப்பித்திருப்பதாக தனது கடிதத்தில் தெரிவித்தார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணி சார்பாக கொழும்பு மாவட்டததில் போட்டியிட, தான் விரும்புவதாகவும் தனது கடிதத்தில் அவர் மேலும் தெரிவித்தார்.

அரசிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளிற்கும் இடையிலான சமாதான முயற்சியில் அரசதரப்புப் பேச்சுவார்த்தையாளர்களில் ஒருவராக இவர் கலந்துகொண்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# மரண அறிவித்தல்

## கிருஸ்ணர் சின்னையா

**(ஓய்வுபெற்ற அதிபர் - தெல்லிப்பழை)**

தெல்லிப்பழைய்யைப் பிறப்பிடமாகக்கொண்ட கிருஸ்ணர் சின்னையா அவர்கள் 11.02.2004 நேற்றுமாலை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அன்னம்மாவின் அன்புக் கணவரும், ஜசிந்தா நடராசா (அமெரிக்கா), ஜனீறா (ஆசிரியர், இரத்மலானை இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத்தந்தையும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப் படும்.

தகவல்
ஜனீறா (மகள்)
தொலைபேசி இல. - 0112 727549

(சி-2217)

இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 12.02.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.